398



398/ப-?
CLS
OF THE REGISTRAR OF
11 NOV 1957
MADRAS

# தமிழ் வாசகம்

## நான்காம் புத்தகம்

எஸ். ஜி. தானியேல்

TB
031(4)
N57
132404.

# தேசீய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜெயஹே
    பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
    த்ராவிட உத்கல வங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
    உத்சல ஜலதி தரங்கா
தவசுப நாமே ஜாகே
    தவசுப ஆசிஷ மாங்கே
காயே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜயஹே
    பாரத பாக்ய விதாதா
ஜயஹே ஜயஹே ஜயஹே
    ஜய ஜய ஜய ஜயஹே

# தமிழ் வாசகம்

## நான்காம் புத்தகம்

எஸ். ஜி. தானியேல், B.A.
*Madras Educational Service*

திருத்திய பதிப்பு

CLS

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்

THE CHRISTIAN LITERATURE SOCIETY
*(In association with the United Society for Christian Literature)*
POST BOX 501, PARK TOWN, MADRAS 3
*and at*
MYSORE BANGALORE TIRUVALLA

S.B.

*COPYRIGHT*

*Twenty-eighth Edition*, 1956
*Reprinted*, 1957

*Approved for class use by the Madras Text-Book Committee—Vide Fort St. George Gazette, dated 4-5-1955 page 12 of Part I.*

TB 031 (4) N57

PAPER USED: DOUBLE CROWN 24 LBS. WHITE PRINTINGS

132404.
600 008.

PRINTED AT THE DIOCESAN PRESS, MADRAS—1957. B8551

# ஆசிரியருக்குக் குறிப்புக்கள்

1. பாடத்தை வாசிக்க ஆரம்பிக்குமுன், ஆசிரியர் அப்பாடத்தின் பொருளைப் பிள்ளைகளுடைய வாழ்க்கையோடு தொடர்புபடுத்தி, அவர்களோடு அதைக் குறித்து உரையாடல் வேண்டும்.

2. அச்சமயத்தில் உபாத்தியாயரும் பிள்ளைகளும் புத்தகத்தை மூடி வைத்துவிட்டுப் பாடத்துக்குச் சம்பந்தமான பொருள்கள், உருவங்கள், படங்கள் முதலிய உபகரணங்களைக்கொண்டு உரையாடவேண்டும். புதிய பாடத்திட்டத்திற்கிணங்க இப்புத்தகத்தில் முதல் மூன்று புத்தகங்களிலுமில்லாத சுமார் எழுநூறு புதுச் சொற்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பாடத்திலும் வரும் புதுச் சொற்கள் அவ்வப் பாடத்தின் தலைப்பில் குறித்துக் காட்டப்பட்டுள. உரையாடும்போது அப்புதுச் சொற்களையும் பிள்ளைகள் உபயோகிக்கும்படி ஆசிரியர் பார்த்துக்கொள்ளவேண்டும்.

3. உரையாடும்போது பாடத்துக்கு அதிகத் தொடர்பில்லாத காரியங்களில் பிள்ளைகளுடைய கவனம் செல்லாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும்.

4. கருத்துக்கள் யாவும் பிள்ளைகள் மனத்தில் நன்ருய்ப் பதிந்த பின், அவற்றில் சில வாக்கியங்களைக் குறிப்பிட்டு அவைகளைப் பிள்ளைகள் பிழையின்றி எழுதும்படிசெய்து, அதன்பின் புத்தகத்தைத் திறந்து வாசிக்கச் சொல்லவேண்டும்.

5. பிள்ளைகள் பிழையாய் வாசித்தால், ஆசிரியர் அவைகளைத் திருத்திச் சரியாய் வாசித்துக்காட்டவேண்டும். மற்றவர்களுக்குக் கேட்கும்படி தெளிவாய் வாசிக்கத் தெரிந்தபின், மௌனமாக வாசிக்கவும் பிள்ளைகள் பழகவேண்டும்.

6. கடின பதங்களுக்குப் பிள்ளைகளிடத்திலிருந்தே பொருளை வருவிக்க முற்படவேண்டும். அர்த்தத்தை வருவித்தபின் அதைக் கரும்பலகையில் எழுதிக்காட்டவேண்டும்.

7. பாடங்களின் இறுதியில் கொடுத்திருக்கும் பயிற்சிகளை நடத்துவதுமன்றி, அவைபோன்ற பல பயிற்சிகளையும் ஆசிரியர் தயார்செய்து போதிக்கவேண்டும். பிள்ளைகள் நன்ருய் எழுதும்படியாகவும், அவர்களுடைய எழுத்துக்கள் சுத்தமாயும் அழகாயும் இருக்கும்படியாகவும், ஆசிரியர் கவனித்துக்கொள்ளவேண்டும்.

8. பிள்ளைகளுக்குப் படிப்பில் ஊக்கமும் மகிழ்வும் உண்டாகவும் அவர்களுடைய இயற்கையறிவு வளரவுந் தக்கதாக, ஒவ்வொரு பாடத்திற்கும் சம்பந்தமான கிண்டர்கார்ட்டன் தொழில்கள், சித்திரம் வரைதல், கதை, பாட்டு, ஆட்டம் முதலியவற்றையும் கற்பிக்க வேண்டும்.

9. ஆசிரியர் ஒவ்வொரு பாடத்தையும் முன்னதாகவே வாசித்துத் தயார்செய்து, அதற்குப் பாடக்குறிப்புக்கள் எழுதிவைத்துக்கொண்டு போதிக்கவேண்டும். ஒவ்வொரு ஆசிரியரிடத்திலும் நல்ல தமிழ் அகராதி ஒன்று இருக்கவேண்டும்.

10. பிள்ளைகள் நல்லொழுக்க முறைகளைப் பழகுவதற்குத் துணையாக ஆசிரியர் தன் பேச்சையும், நடக்கையையும் மிகக் கருத்தாய்ச் சீர்ப்படுத்திக்கொள்ளவேண்டும்.

# பொருளடக்கம்


| பாடம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | கஸ்தூரிபா காந்தி ... ... ... | 1 |
| 2. | நமது தேசீயக் கொடி ... ... ... | 6 |
| 3. | இளவரசியும் பொற்கனிகளும் ... ... | 11 |
| 4. | நமது நாடு ... ... ... | 13 |
| 5. | பாப்பாப் பாட்டு (சி. சுப்பிரமணிய பாரதியார்) ... | 16 |
| 6. | மௌன வாசிப்புப் பயிற்சி—I ... ... | 17 |
| 7. | சிறந்த தருமம் ... ... ... | 21 |
| 8. | புளிய மரம் ... ... ... | 24 |
| 9. | தபால் ... ... ... ... | 29 |
| 10. | மழை (சி. சுப்பிரமணிய பாரதியார்) ... ... | 33 |
| 11. | பருத்தி ... ... ... ... | 35 |
| 12. | மௌன வாசிப்புப் பயிற்சி—II ... ... | 40 |
| 13. | பட்டி ... ... ... ... | 43 |
| 14. | காற்று ... ... ... ... | 47 |
| 15. | பவளம் ... ... ... ... | 51 |
| 16. | கிளி (தேசிகவிநாயகம் பிள்ளை) ... ... | 57 |
| 17. | திருட்டுக்கு மருந்து ... ... ... | 58 |
| 18. | உப்பு ... ... ... ... | 62 |
| 19. | முதல்தர முத்துக்கொட்டை ... ... | 65 |
| 20. | சாரணச் சிறுவர் ... ... ... | 69 |
| 21. | மௌன வாசிப்புப் பயிற்சி—III ... ... | 73 |
| 22. | தோல் ... ... ... ... | 77 |
| 23. | தமிழ்ப்பணி (நாமக்கல் கவிஞர்) ... ... | 81 |
| 24. | விதைக்கிறவன் ... ... ... | 83 |
| 25. | தந்தையின் மாறாத அன்பு ... ... | 87 |
| 26. | கடிதம் எழுதுவது (மாதிரி 1) ... ... | 91 |
| 27. | ,, (மாதிரி 2) ... ... | 92 |
| 28. | ,, (மாதிரி 3) ... ... | 93 |

29. பதிலுக்குப் பதில் ... ... ... 95
30. கடவுள் வாழ்த்து ... ... ... 97
31. வெற்றிவேற்கை ... ... ... 97
32. புத்தர் அறிவுரை (கதைப் பகுதி) ... ... 101
33. நீதிவெண்பா ... ... ... 102
34. வாக்குண்டாம் ... ... ... 104
செய்யுள் பாகத்தின் அரும்பத வுரை ... ... 105



# 1. கஸ்தூரிபா காந்தி

| | | |
|---|---|---|
| திருவினை | மனப்பான்மை | அர்ப்பணம் |
| வைதிக | நெகிழ்ந்து | நீத்தார் |
| நெறிகள் | கட்டுப்பாடு | அருள்நெறி |
| விடுதி | அணிகலனுக | பொன்னெறி |

மாணவர்களே, நீங்கள் நமது தேசப் பிதாவாகிய காந்தியடிகளைப் பற்றிப் படித்திருக்கிறீர்கள். அவர் ஒரு சாதாரண மனிதரல்லர்; உலகம் போற்றும் உத்தமர். அந்த உத்தமருக்கமைந்த வாழ்க்கைத் துணைவியாரும் எவ்வளவு சிறந்த உத்தமியாகத் திகழ்ந்தார் என்பதை அறிய ஆவல் கொள்வீர்களல்லவா?

காந்தியடிகளும் அவரது துணைவியரான கஸ்தூரிபாவும் ஒரே ஊரில், ஒரே ஆண்டில், ஒத்த நற்பண்புகள் படைத்த இருவேறு குடும்பத்தில் பிறந்தனர். இவர்கள் குஜராத்தில் கத்தியவார் என்ற மாவட்டத்திலுள்ள போர்பந்தர் எனும்

ஊரில் 1869-ஆம் ஆண்டில் பிறந்தார்கள். கஸ்தூரிபாவின் தந்தையார் பெயர் கோகுல்தாஸ் மகான். கோகுல்தாஸ் காந்தியடிகளின் தந்தை யாருக்கு நெருங்கிய நண்பர். இவர்களுடைய நட்பு காந்தியடிகளையும் கஸ்தூரிபாவையும் வாழ்க் கைத் துணைவர்களாக இணைக்க ஏதுவாக இருந் தது. தங்கள் பதின்மூன்ருவது வயதில் இல்லற வாழ்க்கையை இனிது நடாத்த ஆரம்பித்தார்கள்.

காந்தியடிகள் கல்வியறிவு மிக்கவர். ஆனல் கஸ்தூரிபா பள்ளிப் படிப்பை அறியாதவர்; எனி னும் தம் கணவருடைய தொடர்பால் எழுதவும் படிக்கவும் கற்றுக்கொண்டார். முயற்சி திருவினை யாக்குமன்ருே! வெறும் எட்டுக் கல்வியோடு அமை யாது, வாழ்க்கையை உயர்த்தும் அருட்கல்வியை யும் அடிகளிடமிருந்து அனுபவ வாயிலாக அறிந்துகொண்டனர். அடிகளது வாழ்க்கையில் சிறந்து விளங்கிய அன்பு, உண்மை எனும் பண்பு கள் கஸ்தூரிபாய் உள்ளத்தில் ஊன்றிவிட்டன.

கஸ்தூரிபா வைதிகக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்தமையால், தம் இளமையில் பெரிதும் வைதிகப் போக்குடையவராயிருந்தார். ஆதலின் ஆரம்பத்தில் இவருக்கு அடிகளின் தீண்டாமை விலக்கு போன்ற நெறிகள் புரட்சிகரமாகத் தோன் றின. ஆனல் விரைவில் அடிகளின் அருள் நெறியைப் பொன்னெறியாகப் போற்றி, அந்நெறி யில் நின்ருெழுகினர்.

ஒரு நிகழ்ச்சி இதனை வலியுறுத்தும். 1915-ஆம் ஆண்டில் அகமதாபாத்தில் சபர்மதியில் சத்தியாக் கிரக ஆச்சிரமம் ஒன்று நிறுவப்பெற்றது. அது

ஒரு கூட்டுறவு விடுதியாகத் தொண்டாற்றி வந்தது. சில மாதங்கட்குப் பின்னர், ஒரு தாழ்த்தப்பட்ட குடும்பத்தினர் ஆச்சிரமத்தில் சேர்ந்தனர். உடனே ஆச்சிரமத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. வைதிக மனப்பான்மை படைத்த கஸ்தூரிபாவும், தாழ்த்தப்பட்டோர் இக் கூட்டுறவில் சேர்வதை எதிர்த்து நின்றனர். இதைக்கண்ட காந்தியடிகளது அருள் பழுத்த திருவுள்ளம் நைந்து புண்பட்டது. எனினும் தம் மனைவியை அன்புநெறி நின்று நன்னெறிப்படுத்த முயன்றார்; உண்ணு நோன்பு பூண்டார். ஏழாவதுநாள் கஸ்தூரிபா மனம் நெகிழ்ந்து, அடிகளின் அருள் நெறியை அகக்கனிவுடன் ஏற்றுக்கொண்டார். அந்நாளிலிருந்து கஸ்தூரிபா தீண்டாமையை அறவே ஒழிப்பதில் அதிக ஆர்வம் காட்டினர்.

காந்தியடிகள் விதித்த கடுமையான கட்டுப்பாடுகட்கும், ஒழுங்கு முறைகட்கும் ஆளாகவேண்டியிருந்தும், கஸ்தூரிபா அவற்றையெல்லாம் பொறுமையோடு ஏற்றுக்கொண்டார். இருவரும் தியாகத்தையே அணிகலனுகப் பூண்டனர். நாட்டின் நலத்தையே தங்கள் நலமாகக் கருதினர். நாட்டின் விடுதலைக்காக அல்லும் பகலும் அரும்பாடு பட்டனர்; சிறை சென்றனர்; தண்டனை ஏற்றனர்; பட்டினி கிடந்தனர். சுருங்கக்கூறின், நாட்டின் சுதந்தரத்திற்காகத் தங்கள் உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணம் செய்தனர்.

காந்தியடிகள் 1922-ஆம் ஆண்டில் சிறைவாசம் செய்தபோது, கஸ்தூரிபா கிராமங்களுக்குச் சென்று, அடிகளின் முன்னேற்ற வேலைகளைத்

தொடர்ந்து செய்து வந்தார். மது அருந்துவதால் நேரிடும் கேடுகளை மக்கட்குத் திறம்பட எடுத்து ரைத்து, அத்திய பழக்கத்தை ஒழிக்க முனைந்து நின்ருர். 1930-ஆம் ஆண்டில் உப்புச் சத்தியாக் கிரகம் நடைபெற்றபோது, இவர் "மாதர் சுதந்திர சங்கம்" ஒன்றை நிறுவி, கிராமங்களில் கதர் இயக் கம், மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு போன்ற தொண்டுகளில் ஈடுபட்டார். சேவா கிராமத்தில் இவர் ஆற்றியுள்ள சேவை போற்றற்குரியது. நாட்டின் விடுதலைக்காகப் பன்முறை சிறை சென்ற இவர் சிறையில் இருந்தவாறே 1944-ஆம் ஆண்டில் இம்மண்ணுலகை நீத்தார்.

தேச அன்னை கஸ்தூரிபா காந்தியின் தியாகத் தொண்டினை நாட்டினர் நன்கு மதித்து, இவரது பெயரால் பெரு நிதி யொன்று திரட்டினர். இந் நிதி கிராமப் பெண்கள், குழந்தைகள் நலத்திற் காகச் செலவிடப்படுகின்றது.

கஸ்தூரிபா காந்தி மகாத்துமாவுக்கேற்ற மனைவியராகத் திகழ்ந்தார். இதைக் காந்தியடி களே தம் சுய சரிதையில், தமது நெறியில் நடப் பதையே கஸ்தூரிபா குறிக்கோளாகக் கொண் டிருந்தார் என்று பாராட்டிக் குறிப்பிட்டிருக்கிருர்.

பயிற்சி

1. *நமது தேசப் பிதா யார்?*
2. *காந்தியடிகளின் வாழ்க்கைத் துணைவியார் யார்?*
3. *கஸ்தூரிபா எந்த ஊரில், எந்த ஆண்டில் பிறந்தார்?*
4. *இவரது பெற்ருேர் யார்?*

5. இவருக்கு எந்த வயதில் திருமணம் நிகழ்ந்தது?

6. இவரது கல்வி யறிவைப்பற்றித் தெரிந்ததை எழுதுக.

7. இவர் உத்தமரான காந்தியடிகளுக்கேற்ற சிறந்த உத்தமியாகத் திகழ்ந்தனர் என்பதற்கு இரு எடுத்துக் காட்டுகள் தருக.

8. இவர் உடல் பொருள் ஆவியனைத்தையும் எங்ஙனம் நாட்டின் நலத்திற்காக அர்ப்பணம் செய்தார்?

9. இவரது தேசத் தொண்டினைச் சுருக்கி வரைக.

10. கஸ்தூரிபா காந்தி நிதி—குறிப்பு தருக.

11. காந்தியடிகள் கஸ்தூரிபாவை எவ்வாறு மனமுவந்து பாராட்டியுள்ளார்?

12. கஸ்தூரிபா காந்தியை நாம் அன்னை என்று அருமை யாய் அழைப்பானேன்?

13. கோடிட்ட இடங்களை நிரப்புக:—

(அ) காந்தியடிகள் உலகம் போற்றும் ——.

(ஆ) கஸ்தூரிபா —— வயதில் மணம் புரிந்தார்.

(இ) முயற்சி —— ஆக்கும்.

(ஈ) இவர் —— அணிகலனாகப் பூண்டார்.

(உ) நாட்டின் —— தங்கள் நலமாகக் கருதினர்.

(ஊ) கஸ்தூரிபாவை நாம் —— எனப் பாராட்டு கிறோம்.

14. இப்பாடத்தின் முதல் பத்தியில் உள்ள வாக்கியங் களின் எழுவாய், பயனிலைகளை எடுத்தெழுதுக.

15. இவற்றிற்குப் பொருள் கூறுக:—

திருவினை, நெறிகள், நெகிழ்ந்து, அணிகலன், அர்ப்பணம், நீத்தார்.



## 2. நமது தேசீயக் கொடி

| | | |
|---|---|---|
| பாரீர் | விழைகின்ற | தியாகம் |
| வாரீர் | பின்னடையான் | அகிம்சை |
| கவியரசர் | இரத்தம் | கலாச்சாரம் |
| பல்லாண்டுகள் | சின்னம் | குறிக்கோள் |
| தீர்க்கதரிசனம் | காங்கிரஸ் | குடி |
| இலக்கியங்கள் | அசோகர் | அவமதிப்பு |

‘தாயின் மணிக்கொடி பாரீர், அதைத் தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்’ என்று கவியரசர் சுப்பிரமணிய பாரதியார் பல்லாண்டுகளுக்கு முன்பே அறைகூவியுள்ளார். தேசியக் கொடிதான் ஒரு தேசத்தின் மிக உயர்ந்த, திகரற்ற சின்னமாகும்.

பழைய தமிழ் இலக்கியங்களில் ஒரு நாட்டிற்கு பத்து அடையாளங்கள் உண்டு என்றுகூறி, அவற்றுள் கொடியே மிகச் சிறந்த அடையாளமாகும் என்றும் கூறப்பட்டுள்ளது. தேசத்தின் மதிப்பைக் காக்கவோ, மேன்மைப்படுத்தவோ விழைகின்ற ஒவ்வொருவரும் தேசீயக் கொடியைத் தாழ்ந்து பணிந்து புகழவேண்டும். அக்கொடிக்குச் செய்யும் சிறப்பும், வணக்கமும் தேசத்திற்குச் செய்யும் சிறப்பும் வணக்கமுமாம் என்பதை உணர்தல் வேண்டும். அக்கொடியின் கீழ்த்தான் தேசத்தின் அரசியல் முறைகள் நடைபெறுகின்றன. தன் தேசீயக் கொடியைக் காக்க எந்தத்தேசத்தவனும் பின்னடையான்; எதிரிகள் அக்கொடியை இறக்கவோ,கைப்பற்றவோ வந்தால், அதைத் தடுக்கத் தன் இரத்தத்தைச் சிந்துவான்; உயிரையும் கொடுப்பான்.

இந்தக் கொடி நமது நாட்டின் சுதந்திர சின்னமாகும். நமது மக்களும், தூதுவர்களும் எங்கெங்கிருக்கிறார்களோ அங்கெல்லாம் இக்கொடி பெருமையோடு ஒளிவீசிப் பறக்கும்.

இத் தேசீயக் கொடியை **1921**-ஆம் ஆண்டில் காங்கிரஸ் மகாசபை ஒப்புக்கொண்டது. அன்று முதல் இக்கொடியைக் காங்கிரஸ் உபயோகித்து வந்தது. **1947**-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் **15**-ஆம் தேதி முதல் சில மாறுதல்களுடன் எல்லாக் கட்சிகளும் எல்லா மக்களும் இக்கொடியைத் தேசீயக்கொடியாக ஒப்புக்கொண்டனர்.

தேசீயக் கொடி மூன்றுபங்கு நீளமும் இரண்டு பங்கு அகலமும் உள்ளதாக இருத்தல் வேண்டும். கொடியின் குறுக்குவாட்டத்தில் மூன்று நிறங்கள்

விளங்குகின்றன. முதலில் குங்குமப்பூ நிறமான வெளிறின சிவப்பும், இடையில் வெள்ளை நிறமும், கடைசியில் பச்சை நிறமும் பெற்று, வெள்ளை நிறப் பகுதியின் நடுவில் ஊதா நிறத்தில் அசோகரின் தர்மச் சக்கரமும் பெற்று விளங்குகிறது. இதில் அமைந்துள்ள நிறங்களுக்கும் சக்கரத்திற்கும் பல உயர்ந்த கருத்துக்கள் உண்டு. ஒரு நாட்டிற்குச் சின்னமாக விளங்குவது சிறந்த அழகும் உயர்ந்த கருத்தும் உடையதாக இருத்தல் வேண்டும். அழ கென்று இங்குச் சுட்டியது வெளியழகோ அல்லது கலையழகோ மட்டும் அன்று; உள்ளத்தை மகிழச் செய்யும் கொள்கையழகுமாம்.

கொடியின் மேற்பகுதியில் அமைந்துள்ள குங்கு மப்பூ நிறம் வீரத்தையும் தியாகத்தையும் குறிப்பிடு கிறது. இடையில் உள்ள வெள்ளை நிறம் சத்தியம், தூய்மை, பொறுமை முதலியவற்றை வெளியிடு கிறது. கடைசியில் அமைந்துள்ள பச்சை நிறம் அகிம்சை, இரக்கம், அன்பு முதலியவற்றைக் குறிக்கிறது. ஒரு நாகரிக நாட்டிற்கு மேற்குறித்த கருத்துக்கள் எல்லாம்வேண்டுமென்பது தெளிவாத லால் அக்கருத்தோடு நமது கொடி யமைக்கப் பட்டுள்ளது. அசோகரின் சின்னமான தர்மச் சக்கரம் இக்கொடியின் இடையில் அமைந் துள்ளது. ஒருபுறம் அமைந்துள்ள சின்னம் மறு புறத்திலும் தெளிவாகத் தெரியவேண்டும்; அவ் விதம் தெரியும்போது, அழகாகவும் இருத்தல் வேண்டும் என்னும் கருத்தோடு சக்கரச் சின்னம் அமைக்கப்பட்டது. அச்சக்கரம் பல கருத்துக் களைக் கொண்டதாகும்.

அது இந்தியாவின் சரித்திரத்திற்கும், கலாச் சாரத்திற்கும், மேன்மைக்கும் சின்னமாக இருக் கிறது. அசோகர் அன்பையும், அகிம்சையையும் கடைப்பிடித்து அரசியல் நடத்திய பெரியார் என்று, அவர் பெயர் இந்திய சரித்திரத்தில் மட்டும் அன்றி, உலகச் சரித்திரத்திலேயே சிறந்து விளங்குகின்றது. எனவே, அசோகரின் தர்மச் சக்கரம் சமாதானம், ஒத்துழைப்பு, சகோதரத்துவம், நட்பு முதலிய பல குறிக்கோள்களை வெளியிடுவதன்றி, நிற்காமல் சென்றுகொண்டிருக்கும் காலச்சக்கரத்தையும் சூரி யனையும், மனித உள்ளத்தில் முடிவற்ற உணர்ச்சி களையும் வெளிப்படுத்துகிறது. அது மகாத்மா காந்தியடிகளின் அகிம்சைச் சின்னமாகவும், அவரது பொருளாதாரச் சின்னமாகிய இராட்டை யின் சக்கரமாகவும் விளங்குகிறது. தவிர, சக்க ரத்தின் இயல்பு சுழலுவதாம்; சுழற்சி முன்னேற்றத் தையும், வளர்ச்சியையும் குறிக்கிறது. எனவே, நமது தேசீயக் கொடி தேசத்தின் குறிக்கோளையும், கொள்கைகளையும், ஆசைகளையும் தெளிவாகக் கொண்டுள்ளதாகும்.

இக்கொடி நமது தேசத்தின் பூரணத்துவத்திற் கும், ஒற்றுமைக்கும் மதிப்புக்கும் சின்னமாக உள்ளது. இக்கொடியின் கீழ் முடிமன்னரும் குடி யானவரும், முதலாளியும் தொழிலாளியும், ஆண் களும் பெண்களும், கற்ருரும் கல்லாரும் சரிநிகர் சமானமாவர். இந்தியாவின் புதல்வரும் புதல்வி களுமான இந்துக்கள், முகமதியர்கள், கிறிஸ்தவர் கள், ஜெயினர், சீக்கியர், பார்ஸியர், உயர்ந்த வகுப் பார், தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட

வகுப்பார் ஆகிய எல்லாச் சாதிமதத்தைச் சார்ந்தவர்களுக்கும் பேதமின்றி ஆதரவளிப்பது இக்கொடியாகும். இத்தகைய தேசியக் கொடியின் பெருமையையும், கருத்துக்களையும் மேன்மைப்படுத்திக் கொண்டாடவேண்டியது விசுவாசமுள்ள ஒவ்வொரு குடியின் கடமை மட்டுமன்று, கட்டாயமுமாம்.

தேசியக் கொடியை இழிவுபடுத்தும் வகையிலோ, பரிகசிக்கும் வகையிலோ எதுவும் செய்தல் கூடாது. பிரயாணிகள் செல்லும் பஸ் முகப்பிலும், கடை முதலிய வியாபாரத்தலங்களிலும், விளம்பர அட்டை, படம் முதலியவற்றின்மீதும், பறக்க விட்டும் எழுதியும் பயன்படுத்தல் முறையற்ற செயலாகும்.

தேசியக் கொடியை அதன் மதிப்புக்குத்தக்க முறையில் பயன்படுத்த வேண்டும். குறிப்பிட்ட காலங்களில் முறைப்படி கொடியையேற்றி வைத்து, அந்நிகழ்ச்சி கழிந்தபின், இறக்கிப் பத்திரப்படுத்தி வைப்பதுதான் முறையாம். கண்ட கண்ட முறையில் ஒழுங்கின்றி உபயோகிப்பது தேசியக் கொடியை அவமதிப்பதாகுமென்பதை உணரவேண்டும். நல்லுயிரீந்தும் கொடியினைக் காப்போம். அதன் நற்பெயரை எந்நாளும் வளர்ப்போம்.

பயிற்சி

1. நமது தேசியக் கொடி எதன் சின்னமாக விளங்குகின்றது?

2. அதில் காணப்படும் மூவர்ணங்கள் எவை?

3. அவ்வர்ணங்கள் எக்கருத்துக்களைக் கொண்டன?

4. அசோகர் தர்ம சக்கரம் என்றால் என்ன?

இலக்கணம்

இவற்றை இரண்டு வார்த்தைகளாகப் பிரித்து எழுது:—

விற்கொடி, அரவக்கொடி, சிங்கக்கொடி, வருஷோற்சவம்.

# 3. இளவரசியும் பொற் கனிகளும்

மறு பக்கத்திலுள்ள படம் பார்த்து நடந்ததைச் சொல்:—

பயிற்சி:—

1. கீழ்வரும் குறிப்பை உதவியாகக்கொண்டு இக்கதையினை எழுதுக:

கிரேக்க நாட்டிலுள்ள ஓர் இளவரசி—பந்தய ஓட்டத்தில் சிறப்புள்ளவள்—அவளுக்குத் திருமணம்—கணவனைத் தெரிந்தெடுத்த முறை—ஓட்டப் பந்தயத்தில் அவளை எவர் தோற்கடிப்பாரோ அவரே கணவர்—அனேகர் முயன்றனர்—பயனில்லை—இறுதியில் ஒரு புத்திக் கூர்மையுள்ள வாலிபன்—ஒரு யுக்தி செய்தான்—மூன்று பொற்கனிகள் தயாரித்தான்—அவைகளை இரகசியமாய் வைத்துக்கொண்டான்—இளவரசியும் வாலிபனும் ஓட ஆரம்பித்தனர்—பாதிதூரம் ஓடினர்—வாலிபன் பொற்கனிகளை அவள் கண்காண வீசி எறிந்தான்—பளபளப்பான அப்பொற் பழங்கள் இளவரசியைக் கவர்ச்சித்தன—அவள் ஓடும் பாதையைவிட்டுச் சற்று விலகி உருண்டோடும் பழங்களை எடுக்க ஓடுகையில்—வாலிபன் முந்திவிட்டான்—இளவரசி தோற்றாள்—புத்தியுள்ள வாலிபன் அந்த அழகுள்ள இளவரசியை மணந்து, மகிழ்வுற்றான்.

2. இந்நிகழ்ச்சியை இளவரசி கூறுவதுபோலக் கூறுக.

3. இக்கதையினை மணமகன் கூறுவதுபோல் எடுத்துரைக்க.

4. இந்நிகழ்ச்சியைக் கண்டோர் கூறுவதுபோல் கதையினை விவரிக்க.

5. இக்கதை கற்பிக்கும் படிப்பினை யாது?



# 4. நமது நாடு

| | |
|---|---|
| நாடு | பொறித்து வைத்தான் |
| பரவியுள்ளது | மன்னர்கள் |
| வாழ்கின்றார்கள் | பல்வகை |
| நாகரிகம் | வேந்தர் |
| பேரரசர்கள் | செம்மை |
| மக்கள் | மொழி |
| நன்னெறி | கலை |
| நல்லொழுக்க விதி | நூல்கள் |

நமது நாடு இந்தியா எனப்படுகிறது. இந்நாட்டில் வாழ்வோர் யாவரும் இந்தியர் எனப்படுகின்றனர். இந்தியா வடக்கே இமயமலைமுதல் தெற்கே குமரி முனைவரை பரவியுள்ளது. இதுமிகப் பெரிய நாடு. ஏறக்குறைய நாற்பதுகோடி மக்கள் இந்நாட்டில் வாழ்கிறார்கள். பஞ்சாபியரும், சீக்கியரும், வங்காளத்தாரும், தெலுங்கரும், தமிழரும், வேறு பலரும் இந்நாட்டில் உளர்.

நமது நாடு பழைய காலத்திலேயே நாகரிகம் பெற்று விளங்கியது. உலகம் போற்றக்கூடிய பேரரசர்கள் இந்நாட்டை ஆண்டார்கள். அசோக மன்னரைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். நாட்டு மக்களெல்லாரும் நன்னெறி கடைப்பிடித்தொழுகவேண்டுமென்று அவர் பெரிதும் முயன்றவர். நாட்டில் பல இடங்களில் அவர் தூண்களை நிறுத்தி, அவற்றில் நல்லொழுக்க விதிகளைப் பொறித்துவைத்தார். அவரைப்போன்ற சிறந்த மன்னர்களை நினைக்கும்போது நமக்குப் பெருமை உண்டாகிறது.



நாம் இப்பெரிய நாட்டின் தென்பகுதியில் இருக்கிறோம். நமது பகுதி தமிழ்நாடு எனப்படும். நமது தமிழ்நாடு பல்வகை வளம்பொருந்திய நாடு. இந்நாட்டில் காவிரியும், வைகையும், தாமிரபர்ணியும் பாய்கின்றன. தமிழ்நாட்டிலுள்ள காஞ்சியிலும், தஞ்சையிலும், மதுரையிலும், வேறு பல இடங்களிலும் பழைய கோயில்கள் இருக்கின்றன.

தமிழகத்தில் மிகப் பழைய காலம் முதல் மூன்று நாடுகள் இருந்தன. அவற்றைச் சேர, சோழ, பாண்டியர் என்னும் மூவேந்தர் ஆண்டனர். அவர்கள் நாட்டைச் செம்மையாக ஆண்டு, குடிகளைப் பாதுகாத்துவந்தார்கள். அதுவுமன்றி, அவர்

கள் மொழியையும் கலைகளையும் வளர்த்து வந்தார்கள்.

மிகப் பழைய காலமுதல் தமிழ்நாட்டு மக்கள் தமிழ்மொழி பேசி வருகிறார்கள். நமது தமிழ் மொழியில் திருக்குறள், நாலடியார், கம்பராமாயணம் முதலிய சிறந்த நூல்கள் உள்ளன. பல நூறு ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட இந்நூல்கள் இன்றும் நமக்குப் பயன்படுகின்றன. அவற்றையெல்லாம் நாம் படித்து அறிவு பெறலாம்.

### பயிற்சி

1. நமது நாட்டின் பெருமை யாது?
2. அசோக மன்னரைப்பற்றிச் சொல்லு.
3. தமிழ்நாட்டிலுள்ள ஆறுகள் யாவை?
4. தமிழ்நாட்டை ஆண்ட மூவேந்தர் யாவர்?
5. தமிழ்மொழியிலுள்ள சில சிறந்த நூல்களின் பெயர்களைச் சொல்லு.

### இலக்கணம்

(1) பொருள்களின் பெயரைக் குறிக்கும் சொற்களுக்குப் பொருட்பெயர் என்று பெயர்.

(2) பட்டணம், தேசம் என்னும் சொற்கள் இடத்தைக் குறிக்கிறபடியால் அவை இடப்பெயர்கள். இடங்களின் பெயரைக் குறிக்கும் பெயர் இடப்பெயர்.

(3) ஆண்டு, மாதம், தேதி என்னும் சொற்கள் காலத்தைக் குறிக்கிறபடியால் அவை காலப்பெயர். காலங்களின் பெயரைக் குறிக்கும் பெயர் காலப்பெயர்.

(4) இப்பாடத்திலுள்ள பெயர்ச்சொற்களில் பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர் எவையென்று எடுத்து எழுதுக.



# 5. பாப்பாப் பாட்டு

புறஞ்சொல்லல் — வேணும்
சோர்ந்து — வயிரம்
தேம்பி

1. பொய்சொல்லக் கூடாது பாப்பா!—என்றும்
புறஞ்சொல்ல லாகாது பாப்பா!
தெய்வம் நமக்குத்துணை பாப்பா!—ஒரு
தீங்குவர மாட்டாது பாப்பா!

2. துன்பம் நெருங்கி வந்த போதும்—நாம்
சோர்ந்துவிட லாகாது பாப்பா!
அன்புமிகுந்த தெய்வ முண்டு—துன்பம்
அத்தனையும் போக்கிவிடும் பாப்பா!

3. சோம்பல் மிகக் கெடுதி பாப்பா!—தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா!
தேம்பி யழுங் குழந்தை நொண்டி,—நீ
திடங்கொண்டு போராடு பாப்பா!

4. உயிர்களிடத்தில் அன்புவேணும்;—தெய்வம்
உண்மை யென்று தானறிதல் வேணும்;
வயிர முடைய நெஞ்சு வேணும்;—இது
வாழும் முறைமையடி பாப்பா!

—சி. சுப்பிரமணிய பாரதியார்.

அரும்பத விளக்கம்

சோர்ந்துவிடல்—மனத்தளர்வு. வேணும்—வேண்டும். புறஞ்சொல்லல்—பிறரைக் காணுவிடத்துப் பழித்துக் கூறல். வயிரம்—உறுதியான. நெஞ்சு—மனம்.

பயிற்சி

1. என்னென்ன சொல்லலாகாது?
2. நமக்குத் துணை யார்?
3. நாம் ஏன் சோர்ந்துவிடலாகாது?
4. துன்பத்தைப் போக்குபவர் யார்?
5. எது மிகக் கெடுதி?
6. யார் சொல்லைத் தட்டலாகாது?
7. நமக்கு வேண்டுவன யாவை?

# 6. மௌன வாசிப்புப் பயிற்சி—1

| | | |
|---|---|---|
| மெத்தை | சமையற்காரன் | பாய்ச்சுவார்கள் |
| சுமந்து | சொத்தை | சாணி |
| வித்துவான் | கொல்லை | ஆட்டுப்புழுக்கை |
| பேர் சொல்லி | நாற்று | குண்டு |
| பண்டிதர் | பிடுங்கி | முள்ளுக்கத்தரி |
| பலவாறாக | பாத்தி | |

முன்னொரு காலத்தில் கத்ரி என்ற ஓர் ஆங்கிலேயர் இருந்தார். அவர் புதிதாக இங்கிலாந்திலிருந்து வந்தவர். அவருக்குத் தமிழ்மொழி தெரியாது. முத்துக்குமார முதலியார் என்னும் சிறந்த வித்துவான் அவருக்குச் சில காலம் தமிழ் கற்றுக் கொடுத்து வந்தார்.

ஒருநாள் இருவரும் வீட்டு மெத்தையில் பேசிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது தெருவழியே ஒருவன் கத்தரிக்காய்க் கூடையைத் தலையில் சுமந்து கொண்டு 'கத்தரிக்காய், கத்தரிக்காய்' என்று கூவிக் கொண்டு போனான். கத்ரி என்பவர் வித்துவானைப் பார்த்து, 'பண்டிதரே, அதென்ன? தெருவில் யாரோ ஒருவன் என்னைப் பெயர்சொல்லிக் கூப்பிடுகிறதுபோல் இருக்கிறதே' என்றார். பண்டிதர் அவரைப் பார்த்து, 'தங்களை ஒருவரும் கூப்பிடவில்லை. தெருவில் ஒருவன் கத்தரிக்காய் விற்றுக் கொண்டு போகிறான். கத்தரி என்பது ஒரு செடி. அதன் காய்க்குக்கத்தரிக்காய் என்று பெயர். அதைச் சமைத்துச் சாப்பிட்டால் மிக்க சுவையாய் இருக்கும். காய்களில் மிகச் சிறந்தது' என்று பலவாறாக அதைப்பற்றிப் புகழ்ந்துபேசிக் கடைசியாக, இந்தப் பெயரைத் தாங்கள் மறக்கமாட்டீர்கள் என்று புன் சிரிப்புடன் சொன்னார். உடனே கத்ரி என்பவர் மிகவும் சிரித்தார். கத்தரிக்காய் சாப்பிடவேண்டும் என்ற ஆசையும் அவருக்கு அதிகமாய் உண்டாயிற்று.

பின்பு சமையற்காரனைக் கூப்பிட்டு அன்று கத்தரிக்காய் வாங்கிச் சமையல் செய்யும்படி சொன்னார். சமையற்காரனும் உடனே கத்தரிக்காய்க்காரனைக்

கூப்பிட்டு, சொத்தையில்லாத நல்ல பிஞ்சுக் கத்தரிக்காய்கள் சில வாங்கிச் சமைத்து வைத்தான். அவர் சாப்பிட்டபின், கத்தரிக்காய் மிக்க சுவையாய் இருந்தது என்று சமையற்காரனை மெச்சிக்கொண்டார்.

அடுத்தநாள் முத்துக்குமார முதலியார் வழக்கம் போலத் தமிழ் கற்பிக்கும்பொருட்டுப் பங்களாவுக்கு வந்தார். அவர் வந்தவுடன் கத்ரி கத்தரிக்காயின் சுவையைப்பற்றி மேன்மையாகப் பேசினார். பின்பு கத்தரிச் செடி பயிராகும் விதத்தைப்பற்றித் தெரிந்து கொள்ள விரும்பினார். முதலியார் அவரை ஒரு கத்தரித்தோட்டத்துக்குக் கூட்டிக்கொண்டுபோய்க் கத்தரியைப்பற்றிப் பல காரியங்களை அவருக்குப் போதித்தார். அவை வருமாறு:—

1. கத்தரிச்செடிகளைத் தோட்டங்களிலும், வீட்டுக் கொல்லைகளிலும் பயிரிடுவார்கள்.

2. கத்தரி விதைகளை முதலில் ஓர் இடத்தில் விதைத்து, நாற்றுகள் உண்டாக்கிச் சில இலைகள் விட்டபின் அவைகளைப் பிடுங்கிப் பாத்திகளில் நட்டுத் தண்ணீர் பாய்ச்சுவார்கள்.

3. அவைகள் செழிப்பாய் வளர்ந்து பலன் கொடுப்பதற்காகச் சாணி, சாம்பல், ஆட்டுப் புழுக்கை முதலியவற்றை எருவாகப் போடுவார்கள்.

4. கத்தரிச்செடிகளை ஒவ்வொரு வருடமும் புதிதாய் நட்டுக்கொண்டிருக்கவேண்டும். ஒரு வருடத்திற்குமேல் அவை பலன் கொடுக்கமாட்டா.

5. கத்தரிக்காய்களில் பலவகை உண்டு; சில நீளமானவை, சில குட்டையானவை, சில முட்டை வடிவமாய் இருக்கும், சில குண்டாயிருக்கும். நிறத்திலும் பல விதங்கள் உண்டு; சில சிவப்பு, சில

வெண்மை, சில பச்சை, இன்னும் சிலவற்றில் இரண்டு மூன்று நிறங்கள் கலந்திருக்கும். சில கத்தரிக்காய்களின்மேல் முட்கள் இருக்கும். அவற்றிற்கு முள் கத்தரிக்காய்கள் என்று பெயர். கத்தரிப் பழம் மஞ்சள் நிறமாயிருக்கும். அதற்குள் இருக்கும் விதைகள் வெண்மையாய் இருக்கும்.

6. கத்தரிக்காயைப் பலவிதமாகச் சமைத்துச் சாப்பிடலாம். பணக்காரர், தரித்திரர், பெரியவர், சிறியவர் யாவரும் சாப்பிடுவார்கள்.

7. சிலர் கத்தரிக்காய்களை வற்றலாக்கிப் பத்திரமாய் வைத்துக்கொண்டு, வருடம் முழுவதும் உபயோகப்படுத்திக்கொள்வார்கள்.

### பயிற்சி

இப்பாடத்தை மௌனமாகப் படித்து, பின்வரும் கேள்விகளுக்கு விடை எழுது:—

1. கத்தரிச் செடிகளை எங்கே பயிரிடலாம்?
2. கத்தரிச் செடி எவ்வளவு நாள் பலன் கொடுக்கும்?
3. கத்தரிப் பழத்தைப்பற்றி உனக்குத் தெரிந்தவற்றை எழுது.
4. கத்தரிக்காய் சமையலைப்பற்றி உனக்குத் தெரிந்தவற்றைக் கூறுக.

### இலக்கணம்

(1) சமையற்காரன் வந்தான்.
மாடு வந்தது.

இவ்வாக்கியங்களில் ஒன்றின் பயனிலையை இன்னொன்றுக்கு மாற்றிக்கொள்ளக்கூடாது. ஏனென்றால் சமையற்காரன், மாடு என்னும் இரண்டு பெயர்களும் வெவ்வேறு இனத்தைச் சேர்ந்தவை. தமிழ்மொழியில் மனிதரும், தேவரும் உயர்ந்த பிரிவு அல்லது உயர்திணை. (திணை = பிரிவு).

விலங்குகள் முதலிய உயிர்களும் உயிர் இல்லாதனவும் அஃறிணை (உயர்வு அல்லாத பிரிவு). ஆதலின் திணை இரு வகைப்படும்.

பொருட்பெயர் தவிர மற்ற இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், குணப்பெயர், தொழிற்பெயர் அனைத்தும் அஃறிணையே. பொருட்பெயரில் சில உயர்திணை, சில அஃறிணை.

(உதாரணம்) தகப்பன் வந்தான்
இந்திரன் வந்தான்
அக்காள் படித்தாள்
பசு வந்தது
வீடு விழுந்தது
சித்திரை பிறந்தது
கை உயர்ந்தது

(2) உயர்திணைப் பெயர்கள் சில கூறுக.

(3) அஃறிணைப் பெயர்கள் சில கூறுக.

# 7. சிறந்த தருமம்

| | | |
|---|---|---|
| செல்வன் | சீட்டு | அயர்ந்த |
| குமாரர் | குதித்து | பள்ளத்தாக்கு |
| இறுதிக்காலம் | காப்பாற்றி | சபிக்கிறவர் |
| அணிகலம் | இரக்ககுணம் | நிந்திக்கிறவர் |
| பிரித்து | செங்குத்தான | |
| பத்திரமாய் | கற்பாறை | |

சென்னையம்பதியில் ஒரு செல்வனிருந்தான். அவனுக்கு மூன்று குமாரர்கள் இருந்தனர். அச்செல்வன் தன் இறுதிக்காலத்தில் தன் உடைமைகளில் விலையுயர்ந்த ஓர் அணிகலத்தை எடுத்து வைத்துக் கொண்டு, மீதியைத் தன் பிள்ளைகளுக்குப் பிரித்துக் கொடுத்தான். பின்பு தன் மூன்று புத்திரரையுங்

கூப்பிட்டு, 'மூன்று மாதங்களுக்குள் உங்களில் எவன் ஒரு சிறந்த தருமத்தைச் செய்வானே அவனுக்கு இந்த அணிகலத்தைக் கொடுப்பேன்' என்ருன்.

சில நாட்களுக்குப்பின் மூத்தவன் வந்து, 'ஐயா பிறனொருவன் என்னிடத்தில் ஒரு பெரிய பணப் பையைக் கொண்டுவந்து கொடுத்துப் பத்திரமாய் வைத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டான். அவன் பணத்துக்காக என்னிடத்தில் யாதொரு சீட்டும் பெற்றுக்கொள்ளவில்லை. நான் அந்தப் பணம் முழுவதையும் எடுத்துக்கொண்டிருக்கலாம். ஆயினும் நான் அப்படிச் செய்யாமல், அந்த மனிதன் திரும்பிவந்து கேட்டவுடனே, பணத்தைக் கொடுத்துவிட்டேன். அவன் நன்றியறிதலுடன் பரிசாக எனக்குக் கொடுக்கவந்த பணத்தையும் வேண்டாமென்று சொல்லிவிட்டேன்' என்ருன். அப்பொழுது அவன் தந்தை, 'நீ செய்தது நியாயம்' என மொழிந்தான்.

இரண்டாவது மகன், 'நான் குளக்கரையில் உலாவிக்கொண்டிருக்கும்பொழுது, ஒரு குழந்தை தவறிக் குளத்தில் விழுந்துவிட்டது. உடனே நான் என் உயிரையும் ஒரு பொருட்டென்று எண்ணுமல், குளத்தில் குதித்துத் தண்ணீரில் நீந்திச் சென்று அந்தப் பிள்ளையைக் காப்பாற்றி, அக்குழந்தையின் பெற்ருேரிடத்தில் ஒப்புவித்தேன். இது எவ்வளவு சிறந்த தருமம்' என்ருன். அதற்குத் தகப்பன் 'மகனே, இது மனிதன் ஒவ்வொருவனுக்கும் சாதாரணமாய் இருக்கவேண்டிய இரக்க குணம்' என்ருர்.

மூன்ருவது மகன், 'ஐயா, ஒருநாள் இரவில் என் பகைவன் ஒரு செங்குத்தான கற்பாறையோரத்தில் அயர்ந்த நித்திரை செய்துகொண்டிருந்தான். அந்த இடம் மகா அபாயகரமான இடம். அவன் சிறிது அசைந்தால் கீழே விழுந்து சாக நேரும். அவன் பள்ளத்தாக்கில் விழுந்துவிடாதபடி நான் தகுந்த ஏற்பாடுசெய்து வைத்துக்கொண்டு, அவனே மெதுவாய்த் தட்டி எழுப்பி, வேறு இடத்தில் படுக்க வைத்தேன்' என்ருன். உடனே தகப்பன், 'என் அருமை குமாரனே, "உங்கள் பகைவரை நேசியுங்கள்; உங்களேச் சபிக்கிறவர்களே வாழ்த்துங்கள்; உங்களேப் பகைக்கிறவர்களுக்கும் நன்மை செய்யுங்கள்; உங்களே நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களேத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் கடவுளேவேண்டிக்கொள்ளுங்கள்" என்று கிறிஸ்துபெருமான் போதித்திருக்கிருர். இதுவே சிறந்த தருமம். ஆகையால், இந்த விலேயுயர்ந்த அணிகலம் உன்னுடையது' என்று அவன் கையில் அவ்வணிகலத்தைக் கொடுத்துவிட்டான்.

பயிற்சி

1. இக்கதையை மௌனமாகப் படித்து, அம்மூன்று மக்களுடைய செய்கைகளில் எது நியாயம் என்றும், எது இரக்க குணம் என்றும், எது சிறந்த தருமம் என்றும் சொல்லு.

2. இவற்றிற்கு அதே பொருளுள்ள வேறு பதங்கள் சொல்லு:—

இறுதிக்காலம், அபாயகரம், பகைவன்.

3. கோடிட்ட இடங்களில் ஏற்ற சொற்களே அமைத்துப் படிக்க:

உங்கள் பகைவரை ——, உங்களேச் சபிக்கிறவர்களே ——, உங்களேப் பகைக்கிறவர்களுக்கு —— செய்யுங்கள், உங்களே ——, —— கடவுளே வேண்டிக்கொள்ளுங்கள்.

இலக்கணம்

(1) மகன், மகள், மக்கள், மாடு, மாடுகள். இவை ஒவ்வொன்றையும் எழுவாயாக வைத்து, தனித்தனியே வாக்கியங்கள் அமைத்துச் சொல்லு.

(2) இந்தப் பயனிலைகள் ஒன்றுக்கொன்று மாற்றிக் கொள்ளக் கூடுமா?

மாற்றிக்கொள்ளக்கூடாது. ஏனென்றால் மகன் என்பது ஒரு ஆண் மகனின் பெயர். மகள் என்பது ஒரு பெண் மகளின் பெயர். மக்கள் என்பது ஒன்றுக்கு அதிகமானவர்களின் பெயர். இவை மூன்றும் உயர்திணைப் பெயர்கள். மாடு என்பது ஒன்றைக் குறிக்கும் அஃறிணைப் பெயர். மாடுகள் என்பது ஒன்றுக்கு அதிகமானவைகளைக் குறிக்கும் அஃறிணைப் பெயர். ஆகையால் அவைகளுக்கு முறையே ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்று பெயர். (பால் = வகுப்பு.)

(3) பின்வரும் சொற்களின் பாலைக் கூறு:—

செல்வன், குமாரர்கள், ஐயா, தாய், அவை, பணம், இது, தங்கை.

# 8. புளிய மரம்

| | | |
|---|---|---|
| துவர்க்கும் | ஆவி | செக்கு |
| கரிக்கும் | நாலாபக்கங்கள் | கொட்டாப்புளி |
| கார்க்கும் | சித்திரை | பித்தளை |
| அறுசுவை | வைகாசி | செப்புப்பாத்திரம் |
| புளிப்பு | மாசி | வறுத்து |
| கமுகு | உலுக்கி | ஊறவைத்து |
| கஜம் | தாட்டுக்கோல் | பசை |
| பாதுகாத்து | துவையல் | |
| பட்டுப்போம் | கொழுந்து | |

நாம் உண்ணும் உணவுப்பொருள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொருவிதமான சுவை உண்டு. தேன்



இனிப்பாயிருக்கும்; சுண்டைக்காய் கசக்கும்; பாக்கு துவர்க்கும்; உப்பு கரிக்கும்; மிளகாய் கார்க்கும்; புளியங்காய் புளிக்கும்; இந்த ஆறுவிதமான சுவைக்கு அறுசுவை என்று பெயர். புளிப்பு என்பது அறுசுவையில் ஒன்று.

கறிபதார்த்தங்களுக்குப் புளிப்பு வேண்டியதாயிருந்தால், நாம் புளியை உபயோகப்படுத்துகிறோம்.

புளி ஒரு பெரிய மரத்திலிருந்து கிடைக்கிறது. அம்மரத்துக்குப் புளிய மரம் என்று பெயர். புளிய மரம் எல்லாவிதமான நிலங்களிலும் பயிராகும். நமது நாட்டில் புளிய மரம் இல்லாத ஊர் கிடையாது. சில விடங்களில் வண்டிப்பாதையின் இரு பக்கங்களிலும் நிழலுக்காகவும் இம்மரங்களை வைத்துப் பயிராக்குகிருர்கள்; ஏனென்ருல், இம்மரத்துக்குக் கிளைகளும் இலைகளும் அதிகம்; இது சுமார் நூறு ஆண்டுகள் வரையில் பட்டுப்போகாமல் நிலைத்துப் பலன் கொடுக்கக்கூடியது. தென்னை, கமுகு முதலிய மரங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவது போல இதற்கு எப்பொழுதும் தண்ணீர் பாய்ச்ச வேண்டியதில்லை. கன்று சற்றுப் பெரிதாக வளரும் வரையில் தண்ணீர் ஊற்றிப் பாதுகாத்துவந்தால் பின்பு தானகவே வளர்ந்துவிடும்.

புளிய மரம் பெரிய மரமாதலால் அதன் வேர் நேராக கீழ்நோக்கிப் பத்துப் பதினைந்து கஜ ஆழம் செல்வதுமல்லாமல், பக்கங்களில் எழுபது எண்பது கஜ தூரம் பரவியும் இருக்கும். கிளைகளும் இலைகளும் மிகுதியாயிருப்பதால், அதினின்று ஆவியாய் வெளியே செல்லும் நீர் மிக அதிகம். ஆகையால், மேன்மேலும் நீர் பூமியிலிருந்து மரத்துக்குச் சென்றுகொண்டிருந்தாலன்றி மரம் பட்டுப்போம். இவ்விதத் தண்ணீர்க் குறைவு மரங்களுக்கு நேரிடாதிருக்கவே, வேர்கள் நாலாபக்கங்களிலும் பரவி, தண்ணீரைத் தேடிக்கொள்ளும்படி அமைக்கப்பட்டிருக்கின்றன.

பெரும்பாலும் சித்திரை வைகாசி மாதங்களில் புளி பூக்க ஆரம்பிக்கும். பின்பு பிஞ்சு

பிடித்து, மாசி மாதத்துக்குள் காய் முற்றிப் பழுக்கும். நன்ருய்ப் பழுத்தபின் காற்றினல் பழங்கள் கீழே ஒவ்வொன்ருய் விழுந்துகொண்டிருக்கும். சொந்தக்காரர் நாடோறும் மரத்தடியிற் சென்று, அவைகளைப் பொறுக்கிச் சேர்ப்பார்கள். மரத்தில் ஏறிக் கிளைகளை உலுக்கிப் பழங்களைக் கீழே விழும்படியும் செய்வார்கள். துரட்டுக்கோலாலும் பழங்களைப் பறிப்பதுண்டு. இவ்விதமாகப் பழங்களைச் சேர்த்தபின் அவைகளை வெயிலில் காயவைத்து, ஓடுகளை நீக்கிப் புளியை வேறுபடுத்துவார்கள். பிறகு பழங்களைக் காயவைத்துக் கொட்டைகளை எடுத்துப் பழத்தை உபயோகப்படுத்துவார்கள்.

நமது நாட்டார் குழம்பு, இரசம், கறிகள் முதலியவற்றிற்குப் புளியை மிக உபயோகப்படுத்துகிருர்கள். புளியம் பிஞ்சுகளைப் பக்குவப்படுத்தி ஒருவகையான துவையல் செய்கிருர்கள். புளியின் இலைகளையும் சிலர் இரசம் செய்ய உபயோகிக்கிருர்கள். புளியங்கொழுந்தைப் பருப்போடு சேர்த்துச் சமைத்து உண்பார்கள்.

செக்கு, உரல் முதலியவை செய்ய இம்மரத்தின் அடிப்பாகத்தை உபயோகிக்கிருர்கள். உறுதியாயிருந்தால் உலக்கை, உளிப்பிடி, கொட்டாப்புளி முதலியவை செய்யலாம். சிறிது சாம்பலுடன் புளியிலையைச் சேர்த்து நன்ருய்த் தேய்த்தால் பித்தளை, செப்புப் பாத்திரங்கள் சுத்தமாகும். புளியமரத்தின் எல்லாப் பாகங்களும் நல்ல விறகாக உபயோகப்படும்.

புளியங்கொட்டைகளை வறுத்துத் தோலைப் போக்கித் தண்ணீரில் ஊறவைத்து உப்புப்போட்டு

சிலர் உண்பார்கள். பன்றிகளுக்கு இக்கொட்டைகள் நல்ல உணவாகும். இவற்றை ஊறவைத்து அரைத்து, காய்ச்சி, பசையாகவும் உபயோகிக்கிறார்கள்.

புளி உணவுப்பொருள்களோடு சேர்வதால் வாய்க்குச் சுவையைத் தந்து, உடலை வளர்க்கும். ஆயினும் நோயாளிகளுக்குப் புளியில்லாக் கறியே மேலானது. அவர்கள் புலிக்குப் பயப்படுவது போல் புளிக்கும் பயப்படவேண்டுமென்று சொல்வது வழக்கம். புளிய மரம் மிக வெப்பமானது. அதன் நிழலில் தங்கியிருப்பது உடலுக்குக் கெடுதல் என்று நமது நாட்டார் சொல்லுகிறார்கள்.

### பயிற்சி

1. அறுசுவை என்றால் என்ன? ஒவ்வொரு சுவைக்கும் உதாரணம் தருக.

2. புளிய மரங்களை எப்படி வளர்க்கிறார்கள்?

3. அதன் இலை, காய், பழம், கொட்டை, அடிமரம் ஒவ்வொன்றும் எவ்வாறு பயன்படுகிறது?

4. கீழ்க்கண்ட சொற்களை அமைத்து வாக்கியங்கள் எழுதுக:—

புலி, புளி, கரி, கறி.

### இலக்கணம்

(1) தலை, கை, கால், இலை என்னும் சொற்கள் உறுப்புக்களைக் குறிக்கின்றன. உறுப்பு என்பதைச் சினை என்றும் சொல்லலாம். ஆகையால் இவை சினைப்பெயர்கள். உறுப்புக்களின் பெயரைக் குறிக்கும் சொல் சினைப்பெயர்.

(2) தேன், புளி—இவற்றின் தன்மை அல்லது குணம் அல்லது பண்பு என்ன?

தேனின் தன்மை அல்லது பண்பு—இனிப்பு
புளியின் தன்மை அல்லது பண்பு—புளிப்பு

பொருளின் குணம் அல்லது தன்மையைக் காட்டும் பெயர் பண்புப்பெயர் ஆகும்.

(3) பண்புப்பெயருக்கு வேறு சில உதாரணங்கள்:—

கசப்பு, துவர்ப்பு, கரிப்பு, கார்ப்பு, பெருமை, சிறுமை, நன்மை, தீமை.

இச்சொற்கள் ஒவ்வொன்றும் என்ன பெயர் என்று இந்த அட்டவணையில் எழுதிக் காட்டுக.

மரம், தேன், நாடு, ஊர், வெண்மை, பாதை, கிளை, இலை, வேர், சித்திரை, கொடுமை, வைகாசி, மாசி, பருப்பு, தோல், பன்றி.

| பொருட் பெயர் | இடப் பெயர் | காலப் பெயர் | சினைப் பெயர் | பண்புப் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

# 9. தபால்

அரசியலார்
நிலையம்
ஏற்பாடு
நயா பைசா
அஞ்சலட்டை
உறை
வசூல்
பார்சல்
சேவிங்ஸ் பாங்கி
சேமிப்பு நிதி
பதிவு செய்தல்
ரிஜிஸ்தர்
விகிதம்
கட்டணம்
இன்ஷூர்
பொருளஞ்சல்

அரசியலார் குடிகளுக்குச் செய்துவரும் பல நன்மைகளுள் தபால் மிகப் பிரயோசனமான ஒரு

ஏற்பாடு. ஏனென்ருல் கடிதங்கள், பத்திரிகைகள், புத்தகங்கள், சிறு சாமான் மூட்டைகள், நகைகள், ரூபாய்கள் முதலியவைகளே ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்திற்கு, இவ்வேற்பாடு இருப்பதால்தான் குறைந்த செலவில் அனுப்புகிருேம். கடிதம் முதலியவைகளேக் கொண்டுபோவதற்குச் செல்லும் செலவை அரசியலார் நம்மிடமிருந்து தபால் முத்திரைகள் மூலமாக வசூல் செய்கிருர்கள். இதற்கென்று அவர்கள் பலவிதமான முத்திரைகள் அச்சடித்துத் தபால் நிலேயத்தில் விற்கிருர்கள். ஒரு நயா பைசா முதல் பதினேந்து ரூபாய்வரையில் முத்திரைகள் இருக்கின்றன. இவைகளேத் தவிர, கடிதங்களே அடைத்து அனுப்பக்கூடிய முத்திரை பதித்த உறைகளும், முத்திரை பதித்த அஞ்சலட்டைகளும் இருக்கின்றன. ஒவ்வொருவகை முத்திரையும் வெவ்வேறு நிறமாயிருக்கும். ஐந்து நயே பைசே விலேயுள்ள அட்டையும், பதினேந்து நயே பைசே விலேயுள்ள உறையும் மிகுதியாக உபயோகிக்கப்படுகின்றன.

தபால் அட்டைகள் இரண்டு வகைப்படும். ஒன்று தனி அஞ்சலட்டை, மற்ருென்று பதில் எழுதுவதற்குரிய இரட்டை யட்டை; இந்த அஞ்சலட்டைகளில் ஒரு பக்கத்தின் வலது மூலேயில் முத்திரை பதித்திருக்கும். இந்தப் பக்கத்தில்தான் மேல்விலாசம் எழுதவேண்டும். முத்திரையில்லாத பக்கத்திலும், முத்திரையிருக்கும் பக்கத்தின் இடது புறத்திலுள்ள காலியிடத்திலும், செய்திகள் எழுதலாம். நாமே அஞ்சலட்டைகள் செய்துகொண்டால் மேல்விலாசம் எழுதவேண்டிய பக்கத்தின்

வலது மூலையில் தனியாக முத்திரை வாங்கி ஒட்ட வேண்டும். அட்டைக்கு முத்திரை ஒட்டாமல் தபால் பெட்டியில் போட்டால் அதைத் தபால் அதிகாரிகள் கிழித்து எறிந்துவிடுவார்கள். கடிதத்துக்கு முத்திரை ஒட்டாவிட்டால், அதைப் பெற்றுக் கொள்பவரிடத்திலிருந்து ஒட்டவேண்டிய முத்திரையின் விலைக்கு இரட்டிப்பான தொகை வசூல் செய்துகொள்ளுவார்கள்.

அஞ்சலட்டையாவது, கடிதமாவது, பார்சலாவது, தவறாமல் போய்ச் சேரவேண்டுமென்று விரும்பினால், அதை ரிஜிஸ்தர் அல்லது பதிவு செய்யவேண்டும். அதற்கு அதிகமாக ஐம்பது நயே பைசே கட்டவேண்டும். பெற்றுக்கொள்பவரிடமிருந்து பெற்றுக்கொண்டதாக கையெழுத்து நமக்கு வரவேண்டுமானால், இன்னும் ஆறு நயே பைசே கூடக் கொடுக்கவேண்டும்.

நகை, நோட்டு, பணம் முதலிய விலையுயர்ந்த பொருளை இன்ஷ்யூர் செய்தனுப்பவேண்டும். அதற்கு நூறு ரூபாய்க்கு முப்பத்தேழு நயே பைசே வீதம் கட்டணம் செலுத்தவேண்டும்.

பணத்தை மணி ஆர்டர் அல்லது பொருளஞ்சல் மூலமாகவும் அனுப்பலாம். அதற்கு ஒவ்வொரு பத்து ரூபாய்க்கும் பதினைந்து நயே பைசே வீதம் கட்டணம் செலுத்தவேண்டும்.

நாம் தேடும் பொருளைக் காப்பாற்றி வைத்துக் கொள்வதற்கும் தபால் நிலையத்தில் ஒரு நல்ல ஏற்பாடு இருக்கிறது. அதற்குச் **சேவிங்ஸ் பாங்கி**

அல்லது சேமிப்பு நிதி என்று பெயர். அதில் 2 ரூபாய் முதல் 15,000 ரூபாய் வரையில் போட்டு வைக்கலாம். அதற்கு அரசியலார் குறைந்த வட்டியும் கொடுக்கிருர்கள்.

## பயிற்சி

1. தபாற் செலவைச் சர்க்கார் எப்படி வசூல் செய்கிருர்கள்?

2. கடிதங்களை ரிஜிஸ்தர் செய்து அனுப்புவதனுல் என்ன நன்மை? அதற்காகக் கட்டவேண்டிய கட்டணம் எவ்வளவு?

3. எவற்றை இன்ஷூர் செய்தனுப்பவேண்டும்? அப்படிச் செய்வதால் என்ன நன்மை?

4. மணி ஆர்டர் என்ருல் என்ன? அதற்கேற்பட்ட கட்டணம் எவ்வளவு?

5. இவற்றிற்கு இரண்டு அர்த்தங்கள் எழுதுக:—
நகை, கால்.

6. கிழி, கிளி—இவ்விரண்டிற்கும் என்ன வித்தியாசம்?

## இலக்கணம்

கடிதம் எழுதினுன்.
கடிதம் எழுதமாட்டார்கள்.
கடிதம் அனுப்புகிறேன்.

(1) வாக்கியம் ஒவ்வொன்றிற்கும் எழுவாய் பயனிலை சொல்லு:—

அவன், அவர்கள், நான்—இவை எழுவாய்கள்.
இவை வாக்கியங்களிலில்லை; ஆயினும் மறைந்திருந்து பொருள் கொடுப்பதால் தோன்ருு எழுவாய் எனப்படும்.

(2) கீழ்வரும் சொற்களைத் தொழிற்பெயராக்கு:—
அனுப்பு, எழுது, ஒட்டு, கிழித்தான், விரும்பினுன், கட்டினுன்.



# 10. மழை

| | |
|---|---|
| தீம்தரிகிட | சேடன் |
| தகிங்கிட | மிண்டி |
| அண்டம் | வெற்பு |
| சட்டச்சட | செண்டு |

1. திக்குக்கள் எட்டும் சிதறி—தக்கத்
தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட
தீம்தரிகிட
பக்கமலைகள் உடைந்து—வெள்ளம்
பாயுது பாயுது பாயுது—தாம்தரிகிட
தக்கத் ததிங்கிட தித்தோம்—அண்டம்
சாயுது சாயுது சாயுது—பேய்கொண்டு
தக்கை யடிக்குது காற்று—தக்கத்
தாம்தரிகிட தாம்தரிகிட தாம்தரிகிட
தாம்தரிகிட.

2. வெட்டி யடிக்குது மின்னல்,—கடல்
வீரத் திரைகொண்டு விண்ணை யிடிக்குது;
கொட்டி யிடிக்குது மேகம்;—கூ
கூவென்று விண்ணைக் குடையுது காற்று;
சட்டச்சட சட்டச்சட டட்டா—என்று
தாளங்கள் கொட்டிக் கனைக்குது வானம்;
எட்டுத் திசையும் இடிய—மழை
எங்ஙனம் வந்ததடா, தம்பிவீரா!

3. அண்டம் குலுங்குது, தம்பி!—தலை
ஆயிரந் தூக்கிய சேடனும் பேய்போல்
மிண்டிக் குதித்திடு கின்றான்;—திசை
வெற்புக் குதிக்குது; வானத்துத் தேவர்
செண்டு புடைத்திடு கின்றார்;—என்ன
தெய்விகக் காட்சியைக் கண்முன்பு
கண்டோம்!
கண்டோம் கண்டோம், கண்டோம்—இந்தக்
காலத்தின் கூத்தினைக் கண்முன்பு
கண்டோம்!

—சி. சுப்பிரமணிய பாரதியார்.

அருஞ்பத விளக்கம்

திக்கு - திசை. சிதறி - பரவி. அண்டம் - உலகம். திரை - அலை. விண்ணை - ஆகாயத்தை. எங்ஙனம் - எப்படி. சேடன் - ஆதிசேடன் எனும் பாம்பு. மிண்டி - ஆரவாரித்தெழுந்து. வெற்பு - மலை. செண்டு புடைத்திடுகின்றார் - பந்து அடிக்கின்றார்.

பயிற்சி

(1) மழை பொழியும் காட்சியை வர்ணிக்க.
(2) வெள்ளம் பாய்கின்ற விதம் யாது?
(3) காற்று எவ்வாறு அடிக்கின்றது?

(4) மின்னல் எங்ஙனம் மின்னுகின்றது?

(5) இடி இடிக்கும் விதம் யாது?

(6) கண்ட தெய்விகக் காட்சி யாது?

(7) இச்செய்யுளை இயற்றிய புலவரைப்பற்றித் தெரிந்ததை எழுது.

(8) இச்செய்யுள் நலத்தினைப் புலப்படுத்துக.

# 11. பருத்தி

| | | |
|---|---|---|
| தினை | சுரை | பள்ளியறை |
| வரகு | வெண்டை | தலையணை |
| துவரை | முருங்கை | திண்டு |
| காராமணி | பாகல் | மகளிர் |
| உளுந்து | கக்கரி | சருகு |
| பட்டாணி | வெள்ளரி | காம்பு |
| வாதுமை | தக்காளி | மணை |
| பீர்க்கு | அரைக்கீரை | நெசவு |
| புடல் | முளைக்கீரை | கரிசல் |
| பூசணி | முள்ளங்கி | |

மனிதருக்கு உண்ண உணவும், உடுக்க ஆடையும் வேண்டும். நாம் உணவுக்காக நெல், கம்பு, சோளம், கேழ்வரகு, சாமை, தினை, வரகு, கோதுமை முதலிய தானியங்களையும் துவரை, காராமணி, மொச்சை, உளுந்து, கடலை, பட்டாணி, கொள் முதலிய பயறு வகைகளையும், முந்திரி, வாதுமை முதலிய பருப்பு வகைகளையும், கத்தரி, பீர்க்கு, புடல், பூசணி, சுரை, வெண்டை, முருங்கை, அவரை, பாகல், கக்கரி, வெள்ளரி, தக்காளி முதலிய காய்களையும், அரைக்கீரை, முளைக்கீரை, கோஸ் முதலிய கீரைகளையும், வள்ளி, உருளை,

கருணை, முள்ளங்கி முதலிய கிழங்குகளையும், மா, பலா, வாழை, திராட்சை, கிச்சிலி, மாதுளை, ஈந்து முதலிய பழங்களையும் உபயோகிக்கிறோம். உடுக்கும் உடைகள் பெரும்பாலும் பருத்திச்செடியிலிருந்து உண்டாகும் பஞ்சினாலே செய்யப்படுகின்றன. குளிர்ந்த தேசத்தில் இருக்கிறவர்கள் ஆட்டுமயிரினால் செய்த உடைகளை உடுத்துக்கொள்ளுகிறார்கள். பணக்காரர் பட்டாடைகளை அணிந்துகொள்ளுகிறார்கள். ஆனால் சாதாரண மக்கள் உடுத்துக் கொள்ளும் ஆடை பஞ்சிலிருந்துதான் கிடைக்கிறது. ஆகையால் பருத்திச் செடி மற்றச் செடிகளைவிட மிகவும் மேன்மை பொருந்திய செடி.

பஞ்சானது வெண்பஞ்சு, செம்பஞ்சு, இலவம் பஞ்சு என மூன்று வகைப்படும். உயரமாய் வளரும் இலவமரத்தினின்று இலவம்பஞ்சு கிடைக்கிறது. இலவம் பஞ்சு மிகவும் மெத்தனவிருப்பதால் அதைக்கொண்டு பள்ளியறைக்கு வேண்டிய மெத்தை, தலையணை, திண்டு முதலியவைகள் செய்வார்கள். மற்ற இருவகைப் பஞ்சுகளும் பருத்திச் செடியில் விளைகின்றன. பருத்திப் பஞ்சினால்தான் துணிகள் நெய்யப்படுகின்றன.

ஒருவகைப் பருத்திச்செடி இரண்டு மூன்று அடி உயரம் வளர்ந்து நிலத்திற் படரும். மற்றொரு வகை மரமாக வளரும். தரையில் படருகிற வகையே மேன்மையானது. இக்காலத்தில் நமது நாட்டுப் பருத்தியைவிட அமெரிக்கன் பருத்தி என்று சொல்லப்படும் கம்போடியாப் பருத்தி மிக மதிக்கப்பட்டுப் பல இடங்களில் பயிரிடப்படுகிறது. ஏனெனில், நாட்டுப் பருத்தியைவிடக் கம்போடி




யாப் பருத்தியிலிருந்து நூற்கும் நூல் மிக நீளமா யிருக்கும். ஆகையால், நூல் நூற்பவர்கள் அதற்கு அதிக விலை கொடுத்து வாங்குகிறார்கள். ஆனால், நாட்டுப் பருத்தியையும் கம்போடியாப் பருத்தியை யும் கலந்து விட்டால் விலை குறைந்துவிடும். நூல் நூற்பதற்காக ஒவ்வொரு வகைப் பருத்திக்கும் ஒவ் வொரு வகையான இயந்திரம் வேண்டும். கலப்புப்

பருத்தியைக்கொண்டு நூல் நூற்பது மிகவும் கடினம்.

பருத்திச் செடியின் இலைகள் பசுமையாயும், அகலமாயும், நுனியில் விரல்கள்போன்ற கூரிய பிரிவுகளையுடையனவாயும் இருக்கின்றன. பருத்திப் பூவின் இதழ்கள் சுற்றிலும் மஞ்சள் நிறமாயும், மத்தியில் நீல நிறமாயும் இருக்கும். பூ உலர்ந்து விழுந்தவுடன் அடியில் காய் தோன்றும். காய்கள் முற்றினபின், சூரிய வெப்பத்தால் காய்ந்து வெடிக்கும். அப்பொழுது உள்ளிருக்கும் பஞ்சு வெளிப்படும். அக்காலத்தில் மகளிரும், சிறுவர் சிறுமிகளும் பருத்தியை எடுத்துச் சேர்ப்பார்கள். பின்பு சருகு, காம்பு, தூசி முதலியவைகளை நீக்கிப் பருத்தியை நன்றாகச் சுத்தப்படுத்திப் பருத்தி அரைக்கும் மணைகளில் கொடுத்து, பஞ்சையும் விதைகளையும் வெவ்வேறாகப் பிரிப்பார்கள். அதன் பின்பு பஞ்சை நன்றாய் வில்லால் அடித்துச் சேர்த்து இராட்டினத்தில் நூலாக நூற்பார்கள். நூலை நெசவுக்காரர் வாங்கிக்கொண்டுபோய், பலவிதமான ஆடைகளாக நெய்கிறார்கள்.

பருத்தி கரிசல் நிலத்தில் மிகுதியாய்ப் பயிராகும். இதற்குத் தண்ணீர் அதிகமாக வேண்டுவதில்லை. அவ்வப்போது பெய்யும் மழையினால் அது விளையும். இப்பயிருக்கு வெயில் மிகுதியாய் வேண்டும். தமிழ் நாட்டில் திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை, கோயம்புத்தூர் முதலிய மாவட்டங்களில் பருத்தி பயிர் செய்யப்படுகிறது.

பயிற்சி

1. நமது நாட்டினர் பெரும்பாலும் உடுக்கும் உடை கட்கு வேண்டிய நூல் எதனின்று கிடைக்கிறது?

2. எத்தனைவிதமான பஞ்சுகள் உண்டு? அவை ஒவ்வொன்றும் எதிலிருந்து கிடைக்கிறது? ஒவ்வொன்றின் பிரயோசனம் என்ன?

3. பருத்தியில் எத்தனைவிதம் உண்டு? கம்போடியாப் பருத்தியின் சிறப்பு யாது?

4. பருத்தி எவ்விடங்களில் பயிராகும்?

5. தமிழ் நாட்டில் எந்தெந்த மாவட்டங்களில் பருத்தி பயிராகிறது? அந்த மாவட்டங்களைச் சென்னை மாநிலப் படத்தில் காட்டுக.

6. கம்போடியா எங்கே யிருக்கிறது? அதைப் பூகோளப் படத்தில் காட்டுக.

7. இப்பதங்களை உபயோகித்து வாக்கியங்கள் ஆக்குக.
மணை, மனை, பட்டு, பாட்டு, துணி, துளி.

இலக்கணம்

செய், வளர், உண்ணு, போ, வா என்பவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு செய்கை அல்லது தொழிலைக் காட்டுவதால் வினைச்சொற்கள். செய்தல், வளர்தல், உண்ணுதல், போதல். வருதல், போக்கு, வரத்து என்பவை தொழிற்பெயர்கள், அவை தொழிலினுடைய பெயர்களாதலால் தொழிற்பெயர்கள். தொழிலின் பெயரைக் காட்டும் சொல் தொழிற்பெயராம்.

ஒன்றின் பெயரைக் குறிப்பது பெயர்ச்சொல். இப்பெயர்கள், ஆறு வகைப்படும். அவை:—

(1) பொருட்பெயர்—பருத்தி, இராட்டினம்.
(2) இடப்பெயர்—மதுரை, தஞ்சாவூர்.
(3) காலப்பெயர்—சித்திரை, திங்கள்.
(4) சினைப்பெயர்—தலை, கிளை.
(5) பண்புப்பெயர்—நன்மை, புளிப்பு.
(6) தொழிற்பெயர்—உண்ணல், உடுத்தல்.

# 12. மௌன வாசிப்புப் பயிற்சி—2

| | | |
|---|---|---|
| ஆண்டுகள் | பரதேசி | இறைக்க |
| கானகம் | அழைத்து | ஊறும் |
| தங்கும்படி | மனமுருகி | கேணி |
| வேட்டை | ஐயாயிரம் | ஈயம் |
| அரசி | அளவிறந்த | பெருகும் |

ஆல்பிரெட் அரசர் அநேக ஆண்டுகளுக்கு முன் ஆங்கில தேசத்தை யாண்ட ஒரு சிறந்த மன்னர். இவ்வரசர் தம் சத்துருக்களுக்குப் பயந்து, ஒரு கானகம் சென்று அங்கே தங்கும்படி நேரிட்டது. அது மழைக்காலம். ஒருநாள் அவ்விடத்தில் உணவுப்பொருள்கள் ஒன்றுமில்லாததால் தம்முடனிருந்த வேலையாட்களனைவரையும் காட்டுக்குப்போய் மிருகங்களை வேட்டையாடி வரும்படி அனுப்பிவிட்டார்.

அரசரும் அரசியும் தனிமையாய் இருந்தனர். அரசர் ஒரு புத்தகத்தை வாசித்துக்கொண்டிருந்தார். அரசி வேலை செய்துகொண்டிருந்தாள். அச்சமயத்தில் ஓர் ஏழைப் பரதேசி மிக்க பசியுடன் அரசனிடத்தில் வந்து பிச்சை கேட்டான். அரசன் அரசியை யழைத்து, உண்பதற்கு ஏதாவது இருந்தால், இந்த ஏழை மனிதனுக்குக் கொடுக்கச் சொன்னார். அரசி, 'ஒரே ஒரு ரொட்டி மாத்திரம் இருக்கிறது. அது நமக்கே போதாது. வேட்டைக்குப் போன வேலைக்காரர் ஒன்றும் கிடைக்காமல் திரும்பி வருவார்களானால், அவர்களுக்கும் உணவு



வேண்டுமே' என்று கூறி, அந்த ஒரு ரொட்டியை யும் எடுத்துவந்து அரசனிடத்தில் கொடுத்தாள். அவர் மனமுருகி, ரொட்டியில் பாதியை யறுத்து அவனுக்குக் கொடுத்துவிட்டு, மகிழ்ந்து மனைவி யைப் பார்த்து: 'ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் கொண்டு ஐயாயிரம் பேருக்கு உண வளித்தவர், தாம் நினைத்தால் இந்த அரை ரொட்டி யைக் கொண்டு நமக்கும் நம்மூடைய வேலைக்கார ருக்கும் வயிறார உணவளிப்பார்' என்று சொன்னார்.

சிறிதுநேரத்தில் வேட்டைக்குப்போன வேலைக்காரர் அளவிறந்த உணவுப் பொருள்களைக்கொண்டு வந்து சேர்த்தார்கள். 'இறைக்க ஊறும் மணற் கேணி, ஈயப் பெருகும் பெருஞ்செல்வம்' என்பது பழமொழியன்றோ? அதுமுதல் அக்காட்டிலிருந்த காலங்களிலெல்லாம் உணவுக்குறைவே இருந்ததில்லை.

## பயிற்சி

1. இக்கதையை மௌனமாகப் படித்துச் சுருக்கமாகச் சொல்லுக.

2. இப்பதங்களுக்கு அதே பொருளுள்ள வேறு பதங்கள் கூறுக:—

கானகம், கேணி.

3. இவ்வரலாறு கற்பிக்கும் நீதி யாது?

1. இவற்றின் பாலைக் கூறுக:—

அரசன், உணவு, மீன், வேலையாட்கள், பொருள்கள், அரசி.

2. இவற்றிற்குப் பெண்பால் பெயர்கள் யாவை?

சீலன், அரசன், வேலைக்காரன், அவன்.

## இலக்கணம்

பின்வரும் இரண்டு சொற்களுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

1. பாம்பு.
2. பாம்புகள்.

'பாம்பு' என்பது ஒன்றைக் குறிக்கிறது.

'பாம்புகள்' என்பது ஒன்றிற்கு மேற்பட்டவைகளைக் குறிக்கிறது.

ஒன்றைக் குறிப்பது ஒருமை எனவும், ஒன்றிற்கு மேற்பட்டவைகளைக் குறிப்பது பன்மை எனவும் சொல்லப்படும்.

# 13. பட்டி

| | | |
|---|---|---|
| பெரும்பாலோர் | தாசில்தார் | ஒப்புவிப்பது |
| குடியானவன் | அடையாளம் | அபராதம் |
| அரசியலார் | வித்தியாசம் | தாலுகா |
| மனம்போல் | விவரங்கள் | அடைக்கப்பட்ட |
| பட்டி | கால்நடை | தொகை |
| பொறுப்பு | பதிவு | விற்பனை |

நமது தேசத்தில் பெரும்பாலோர் பயிர்த் தொழில் செய்து பிழைக்கின்றனர். இத்தொழிலுக்கு முக்கியமாய் உதவிசெய்கின்றவை ஆடு மாடுகள். ஆனால், குடியானவர் சிறிது கவனமற்றவர்களாயிருந்தால், சில வேளைகளில் ஆடுமாடுகள் பயிர்களை அழித்துவிடும். ஆகையால், பயிர்களுக்கு அவ்விதமான கெடுதல்கள் உண்டாகாமலும், ஆடுமாடுகளுக்குக் கெடுதி நேரிடாமலும் இருக்கும்படி அரசியலார் தகுந்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் மனம்போல் திரிந்து, பயிர்களை அழிக்கும் ஆடுமாடுகளை அடைத்துவைப்பதற்கு ஒரு கட்டடம் கட்டி வைத்திருக்கிறார்கள். அதற்குப் பட்டி அல்லது பவுண்டு என்று பெயர். பவுண்டு என்பது ஆங்கில வார்த்தை.

ஒவ்வொரு கிராமப் பட்டியும் அந்தந்தக் கிராம அதிகாரியின் பொறுப்பில் விடப்பட்டிருக்கிறது. அவருக்குமேல் அதிகாரி தாசில்தார்.

பட்டியில் அடைக்கக் கொண்டுவரப்படும் ஒவ்வொரு மிருகத்தினுடைய இனம், நிறம் அடையாளம், ஆண் பெண் வித்தியாசம் முதலிய விவரங்

களை அதற்கென்று வைத்திருக்கும் புத்தகத்தில் பதிவு செய்து, ஓட்டிக்கொண்டு வந்தவனுடைய கையெழுத்தை வாங்கிக்கொண்டு, பட்டியதிகாரி அவனுக்கு ஒரு ரசீது கொடுப்பார். சொந்தக்கார னிடத்தில் மிருகத்தை ஒப்புவிக்கிறவரையில், அதற்குத் தீனிபோட்டுத் தண்ணீர்காட்டிப் பத்திர மாய்ப் பாதுகாத்து, சொந்தக்காரன் வந்து கேட்கும் போது அதை அவனிடம் ஒப்புவிப்பது அந்த அதிகாரியின் கடமை. பயிர்கள் அழிக்கும் ஆடு, மாடு, கழுதை, குதிரை, பன்றி, யானை, ஒட்டகம் முதலிய எல்லா மிருகங்களையும் பட்டியில் அடைக் கலாம்.

சொந்தக்காரன் வந்து மிருகத்தை விடும்படி கேட்டால், அதற்கென்று ஏற்பட்டிருக்கும் அபரா தத்தையும், தீனிச் செலவையும் பெற்றுக்கொண்டு பட்டியதிகாரி மிருகத்தை அவன் கையில் ஒப்பு வித்துவிடுவார். சொந்தக்காரன் மிருகத்தைப் பெற் றுக்கொண்டதற்காகப் புத்தகத்தில் அவனுடைய கையெழுத்தை வாங்கிக்கொண்டு, தான் பெற்றுக் கொண்ட பணத்துக்கு ரசீதும் கொடுத்துவிடுவார். மாதம் முடிந்தவுடன் பட்டியில் அடைக்கப்பட்ட மிருகங்களின் விவரம் அடங்கிய புத்தகத்தின் நகலையும், வசூலான தொகையையும் தாசில்தாருக்கு அனுப்பிவிடவேண்டும்.

பட்டியதிகாரி செய்யும் வேலைக்குச் சம்பள மாக வசூல் செய்யப்பட்ட பணத்தில் ஒரு பாகத்தை அவருக்குத் தாலுகா அலுவலகத்திலிருந்து அனுப்பிவிடுவார்கள். அதற்குக் கமிஷன் என்று பெயர். ஒரு மாதத்தில் வசூலான அபராதத்

தொகை ஒரு ரூபாய்க்கு மேற்படாமலிருக்குமானால் அந்த முழுத்தொகையையும் பட்டியதிகாரிக்குக் கொடுத்துவிடுவார்கள். ஒரு ரூபாய்க்கு மேலும் இரண்டு ரூபாய்க்குள்ளும் வசூலானால் ஒரு ரூபாய் தான் கொடுக்கப்படும். இரண்டு ரூபாய்முதல் பத்து ரூபாய் வரையில் வசூலாகிற பணத்தில் பாதி கொடுக்கப்படும். பத்து ரூபாய்க்குமேல் எவ்வளவு வசூலானாலும் ஐந்து ரூபாய்தான் கொடுக்கப்படும். எவ்விதத்திலும் பட்டி யதிகாரிக்கு ஒரு மாதத்தில் ஐந்து ரூபாய்க்குமேல் கமிஷன் கொடுக்கமாட்டார் கள்.

பட்டியிலடைக்கப்பட்ட தேதிமுதல் பதினைந்து நாட்களுக்குள்ளாகச் சொந்தக்காரன் மிருகத்தைத் தேடி வராவிட்டால், அதை விற்பனைசெய்து தொகையை அரசாங்கத்தாருக்கு அனுப்பிவிடு வார்கள்.

## பயிற்சி

1. பட்டி என்றால் என்ன? அதனால் குடிகளுக்கு ஏற்படும் நன்மைகள் யாவை?

2. பட்டிக்கு வேறு அர்த்தம் சொல்லுக.

3. பட்டியதிகாரி யார்?

## இலக்கணம்

1. கீழுள்ள வாக்கியங்கள் ஒவ்வொன்றிலு மிருக்கும் எழுவாயைப் பன்மையாக்கி முழு வாக்கியத்தையும் எழுது:—

(1) மாடு பட்டியில் அடைக்கப்பட்டிருந்தது.

(2) அவள் மாட்டைப் பட்டியில் அடைத்தாள்.

(3) அவன் மாட்டைத் திருப்பிக்கொண்டு வந்தான்.

2. பின்வரும் வாக்கியம் ஒவ்வொன்றிலுமுள்ள எழுவாயைச் சொல்லுக:—

(1) நான் பட்டியில் அடைத்தேன்.

(2) நீ பட்டியில் அடைத்தாய்.

(3) அவன் பட்டியில் அடைத்தான்.

நான், நீ, அவன் என்னும் சொற்கள் குறிக்கிற மூன்று பொருள்களும் வெவ்வேறு இடங்களில் இருப்பதால் பயனிலைகளை ஒன்றுக்கொன்று மாற்றிச் சொல்லமுடியாது.

நான் இது தன்னைக் குறிக்கும் வார்த்தை; ஆகையால் தன்மை இடத்திலிருக்கிறது என்கிறோம். நீ இது முன் நிற்பவனைக் குறிக்கிறது. ஆகையால் முன்னிலை இடத்திலிருக்கிறது என்கிறோம். அவன் இது தன்மை இடத்திலுமில்லை, முன்னிலை இடத்திலுமில்லை. தன்மை முன்னிலை இரண்டும் அல்லாத சொற்கள் எல்லாம் படர்க்கை இடத்திலும் இருக்கின்றன என்கிறோம்.

3. பெயர்கள் இடவகையால் **தன்மைப்** பெயர், **முன்னிலைப்** பெயர், **படர்க்கைப்** பெயர் என்று மூன்று வகைப் படும்.

தன்மை ஒருமை —நான், யான்.

தன்மைப் பன்மை —நாம், நாங்கள், யாம், யாங்கள்.

முன்னிலை ஒருமை —நீ.

முன்னிலைப் பன்மை —நீர், நீயிர், நீவிர், நீங்கள்.

படர்க்கை ஒருமை —அவன், அவள், அது, மனிதன், மரம்.

படர்க்கைப் பன்மை —அவர், அவர்கள், அவை, மனிதர், மரங்கள்

# 14. காற்று

| | | | |
|---|---|---|---|
| பருமன் | தென்றல் | முழுதும் | வளரா |
| புழுக்கம் | வாடை | சாய்த்து | பெய்யாது |
| உணர்ச்சி | சுழல்காற்று | குமிழி | எரியாது |
| வளைகின்றன | வெறுமை | தள்ளுகிறது | இலவசம் |
| வீசுகிறது | ஐயுறலாம் | எடை | இறைவன் |
| கொண்டல் | அமிழ்த்தி | நொடி | அடியார் |

காற்றடிக்கும் காலங்களில் சிறுபிள்ளைகள் காற்ருடி விட்டு விளையாடுவார்கள். ஆனால் காற்றை யாராவது கண்ணால் பார்த்ததுண்டா? காற்றின் நிறம் என்ன? அதன் உருவம் என்ன? அதன் உயரம் என்ன? அதன் பருமன் என்ன? என்று யாராவது சொல்லக்கூடுமா? நாம் காற்றைக் கண்ணால் காணவிட்டாலும், காற்று இருக்கிறதென்பதை அதன் செய்கைகளால் அறிந்து கொள்ளுகிறோம்.

காற்ருடி பறக்கும்பொழுதும், மரத்தின் இலைகள் அசையும்பொழுதும், காற்று அடிக்கிறது என்று நாம் தெரிந்துகொள்ளுகிறோம். நமக்குப் புழுக்கம் உண்டாகும்பொழுது நாம் விசிறியால் வீசி நமது உடம்பில் காற்றுப் படும்படி செய்துகொள்ளுகிறோம். காற்று அசையும்பொழுது மாத்திரம் உணர்ச்சியினால் காற்று இருக்கிறதென்று தெரிந்து கொள்ளுகிறோம்.

மரக்கிளைகளிலுள்ள இலைகள் எப்பக்கமாய் வளைகின்றனவென்று உற்றுக் கவனித்துப் பார்ப்போமானால், எந்தத் திசையிலிருந்து எந்தத் திசைக்குக் காற்று வீசுகிறதென்று நாம் தெரிந்துகொள்ளலாம். காற்று அடிக்கும் திசையைக்கொண்டு ஒவ்

வொரு விதமான காற்றுக்கும் ஒவ்வொரு பெயரிடப் பட்டிருக்கிறது. கீழ்க்காற்றுக்குக் கோண்டல் என்றும், தென்காற்றுக்குத் தென்றல் என்றும், மேல்காற்றுக்குக் கோடை என்றும், வடகாற்றுக்கு வாடை என்றும், சுற்றிச்சுற்றி அடிக்கும் காற்றுக் குச் சுழல்காற்று என்றும் பெயர்.

காற்று வீசும்பொழுது மட்டும் நாம் காற்று இருக்கிறதாக உணர்ந்துகொள்ளுகிறோம். மற்ற வேளைகளில் காற்று இருக்கிறதா? இல்லையா? இருந் தால் எங்கே யிருக்கிறது? என்று பார்ப்போம். பூமியைச் சுற்றிலும் பல மைல் உயரம் காற்றுப் பரவியிருப்பதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இவ் வுலகத்திலே காற்று இல்லாத இடம் இல்லை. வெறுமையான ஒரு குடத்தை நாம் பார்க்கும்போது அதற்குள் காற்று இருக்குமோவென்று ஐயுறலாம். ஆனால் அந்தக் குடத்துக்குள் காற்று இருப்பது உண்மை. அதை எப்படி அறியலாம்? குடத்தைத் தலைகீழாய்த் தண்ணீருக்குள் அமிழ்த்தினால் தண் ணீர் அதற்குள் முழுவதும் ஏறுவதில்லை. குடத் துக்குள் காற்று இருப்பதால் தண்ணீர் உட்செல் வதற்கு இடம் கொடுக்கவில்லை. ஆனால் குடத்தைச் சிறிது சாய்த்துப் பிடித்தால் நீரிலிருந்து குமிழிக்ள் வெளிவருகின்றன. குடத்துக்குள்ளும் நீர் புகும். குடத்தைச் சாய்க்கும்போது, குடத்திற்குள்ளிருக் கும் காற்று முன்போல் அவ்வளவு பலமாய் நீரை எதிர்க்கமுடியாது. அதனால் நீர் குடத்திற்குள்ளே நுழைந்து, அங்குள்ள காற்றை வெளியில் தள்ளு கிறது. அதனால் குமிழிகள் உண்டாகின்றன.

காற்றுக்கு நிறம் இல்லை, சுவை இல்லை, மணமும் இல்லை. எனினும் அதற்கு எடை உண்டு. இரப்பர்ப் பைகளில் காற்றை அடைத்து நிறுத்துப் பார்த்து, அதற்குள் இருக்கும் காற்று இவ்வளவு எடையுள்ளது என்று தெரிந்துகொள்ளலாம்.

உயிர்கள் வாழ்வதற்குக் காற்று, நீர், உணவு இம்மூன்றும் வேண்டும். இம்மூன்றில் காற்று இன்றியமையாதது. நீரும் உணவும் இல்லாமல் ஒருவன் சில நாட்கள் உயிரோடிருக்கக்கூடும். காற்றில்லாமலோ சில நொடிகள்கூட உயிரோடிருக்க முடியாது. காற்று இல்லாவிட்டால் செடிகள் வளரா; மழை பெய்யாது; நெருப்பு எரியாது; சூரிய வெளிச்சம் பிரகாசிக்காது; ஒருவர் பேசும் ஒலி மற்றவருக்குக் கேளாது. இவ்வித ஆச்சரிய சக்தியுடைய காற்றைக் கடவுள் நம்மெல்லாருக்கும் இலவசமாய்க் கொடுத்திருக்கிறார். 'இறைவனே! உமது செயல்கள் எவ்வளவு சிறப்பானவை! அவற்றையெல்லாம் ஞானமாய்ப் படைத்தீர்' என்று அடியார் ஒருவர் சொல்லுகிறார்.

பயிற்சி

1. 'காற்று இல்லாத இடம் இல்லை.' இதை எப்படி ரூபிப்பாய்?

2. காற்றுக்குக் கனம் இருப்பதை எப்படிக் கண்டுபிடிப்பாய்?

3. கோடிட்ட இடங்களில் தகுந்த வார்த்தைகள் வைத்து வாசி:—

கீழ் காற்றுக்கு —— என்றும், தென் காற்றுக்கு —— என்றும், மேல் காற்றுக்கு —— என்றும், வட காற்றுக்கு

—— என்றும், சுற்றிச் சுற்றி அடிக்கிற காற்றுக்கு —— என்றும் பெயர்.

4. காற்று இல்லாவிடில் என்னென்ன கெடுதல்கள் உண்டாகும்?

## இலக்கணம்

1. காற்றாடி, காற்றாடியை, காற்றாடியால், காற்றாடிக்கு, காற்றாடியிலிருந்து, காற்றாடியினது, காற்றாடியின்கண், காற்றாடியே. இச் சொற்கள் ஒவ்வொன்றையும் வைத்து ஒவ்வொரு வாக்கியம் சொல்லு.

(1) காற்றாடி ஆகாயத்தில் பறக்கிறது.
(2) காற்றாடியைக் கிழித்துவிட்டான்.
(3) காற்றாடியால் பிழைக்கிறான்.
(4) காற்றாடிக்கு வால் இருக்கிறது.
(5) காற்றாடியிலிருந்து இரைச்சல் கேட்கிறது.
(6) காற்றாடியினது நூல் அறுந்துபோயிற்று.
(7) காற்றாடியின்கண் ஆசை வைத்தான்.
(8) காற்றாடியே, உயரப் பறந்து போ.

நாம் எடுத்துக்கொண்டது காற்றாடி என்னும் ஒரே பெயராயிருந்தபோதிலும், இவ்வாக்கியங்களின் அர்த்தத்தில் வேற்றுமை காணப்படுவது ஏன்? காற்றாடி என்னும் பெயரோடு சில உருபுகளைச் சேர்த்ததால் வேற்றுமை ஏற்படுகிறது. இந்த எட்டு வேற்றுமைகளில் முதல் வேற்றுமை தவிர மற்றெல்லா வேற்றுமைகளுக்கும் உருபுகள் இருக்கின்றன. அவையாவன:—

| | | | | |
|---|---|---|---|---|
| இரண்டாம் | வேற்றுமை | உருபு | ஐ | காற்றாடியை |
| மூன்றாம் | ,, | ,, | ஆல் | காற்றாடியால் |
| நான்காம் | ,, | ,, | கு | காற்றாடிக்கு |
| ஐந்தாம் | ,, | ,, | இருந்து | காற்றாடியிலிருந்து |
| ஆறாம் | ,, | ,, | அது | காற்றாடியினது |
| ஏழாம் | ,, | ,, | கண் | காற்றாடியின்கண் |
| எட்டாம் | ,, | ,, | ஏ | காற்றாடியே |

எட்டாம் வேற்றுமைக்கு விளிவேற்றுமை என்றும் பெயர். (விளித்தல் = அழைத்தல்.)

2. தடித்த எழுத்திலுள்ள சொற்களின் வேற்றுமையைக் கூறு:—

(1) காற்று வீசுகிறது.

(2) காற்றை யாராவது பார்த்ததுண்டா?

(3) காற்றுக்கு நிறை உண்டு.

(4) இறைவனே, உமது செயல்கள் எவ்வளவு மிகுதியானவை.

(5) நாம் விசிறியால் வீசி, காற்று வரும்படி செய்கிறோம்.

(6) கீழ்த் திசையிலிருந்து வரும் காற்றுக்குக் கொண்டல் என்று பெயர்.

(7) காற்றினது வேகம் மரக்கிளைகளின் அசைவினால் தெரியும்.

(8) இவ்வுலகின்கண் காற்று இல்லாத இடம் இல்லை

TB 031(4) N5

ஆவணக்காப்பக ... -600 008.
132404

# 15. பவளம்

| | | |
|---|---|---|
| பவளப்பூச்சி | பளு | முத்து |
| மீசை | துணை | சிப்பி |
| பழமை | நவரத்தினங்கள் | சவரம் |
| தீவு | கோமேதகம் | கோரோசனை |
| ஊடே | புட்பராகம் | புனுகு |
| கவர்கவராய் | மரகதம் | சவ்வாது |
| சிற்சில | மாணிக்கம் | அழல் |
| சிறுசிறு | வைடூரியம் | எள்ளார் |
| பூண்டுகள் | தேனீ | |

நமது தேசத்துப் பெண்கள் சிலர் பவளத்தால் செய்யப்பட்ட ஆபரணங்களை அணிந்துகொள்ளு

கிருர்கள். ஆனால், பவளத்தை ஆபரணமாக அணிந்துகொள்ளும் பலருக்கு அது எங்கிருந்து உண்டாகிறதென்று தெரியாது.



பவளமானது கடலில் உள்ள ஒருவிதப் பூச்சியிலிருந்து நமக்குக் கிடைக்கிறது. அந்தப் பூச்சிக்குப் பவளப்பூச்சி என்று பெயர். அது ஒரு கல்லேயாவது, முன்னரே உண்டான பவளக் கொடியையாவது பற்றிக்கொண்டிருக்கும். அதற்கு மெல்லிய உடலும் எட்டு மீசைகளும் உண்டு. அந்த மீசைகளே ஆட்டுவதனால் அது தன் உணவைக் கண்டு பிடிக்கும். சமுத்திரத்தில் செத்து அழுகிக்கிடக்கும் அசுத்த பொருள்களேயே அது தின்று உயிர் வாழும். பவளப் பூச்சியிலிருந்து ஒருவிதச் சுண்ணும்பு வெளிப்பட்டுக்கொண்டேயிருக்கும். அந்தச் சுண்ணும்பினால் அது தன் வீட்டின் சுவரைக் கட்டிக்கொள்ளும். சுவர் வளர வளரப் பவளப்பூச்சியின் பழமையான பாகம் உயிரற்றுப் போய்க் கல்லேப்போல் இறுகிவிடும். இவ்விதமாகப்

பூச்சியின் அவயவத்திலிருந்து உலர்ந்துபோகும் பாகத்துக்குத்தான் பவளம் என்று பெயர்.

வெள்ளைப் பவளங்கள் மிகுதியாகக் கிடைக்கின்றன. சிவப்புப் பவளங்களும், கறுப்புப் பவளங்களும் அருமையாக அகப்படும். பெரும்பாலும் சிவந்த நிறமுள்ள பவளங்கள் இத்தாலியா தேசத்திலிருந்து நமது தேசத்துக்குக் கொண்டுவரப்படுகின்றன. சிசிலி என்னும் தீவில் பவளம் மிகுதியாகக் கிடைக்கிறது.



வெவ்வேறு உருவமுள்ள பவளங்கள் கடலில் அகப்படுகின்றன. சில பவளங்கள் பெரிய கிண்ணத்தைப்போன்ற வடிவுள்ளவை. ஆனால் அவற்றின் ஊடே கிளைகள் ஓடிக் கவர்கவராய்த் தோன்றும். சில முட்டை வடிவமாயிருக்கும். முட்டை வடிவமான பவளத்தில் பூச்சிகள் இருந்துகொண்டு வெளியே எட்டிப்பார்க்கும் காட்சியைப் படத்தில் பார்க்கலாம்.

சமுத்திரத்தில் சிற்சில இடங்களில் பவளப் பூச்சிகளால் உண்டாகிற சிறுசிறு துண்டு நிலங்கள் இருக்கின்றன. பவளக்கொடிகளாகிய இப்பவளத் தீவுகள் பார்ப்பதற்கு மிக வியப்பாயும் அழகாயுமிருக்கும். சில தீவுகள் சமுத்திரத்தின் மத்தியில்

நந்தவனங்கள்போல் காணப்படும். தண்ணீர் மட்டத்திற்கு இரண்டொரு கஜத்திற்குமேல் காணப்படும். இச்சிறு பவளத் தீவுகளில் புற் பூண்டுகள் செழிப்பாய் வளர்ந்து பசுமையாகத் தோன்றும். அங்கங்கே அழகான தென்னந் தோப்புகளும் உண்டாம்.



சமுத்திரத்திலுள்ள பவளத்தை எடுக்கும் விதம் எப்படியெனில், இரண்டு மரங்களைக் குறுக்கு நெடுக்காக வைத்துக்கொள்வார்கள்; அதன் நான்கு மூலைகளிலும் வலைகளைத் தொங்கவிட்டுக் கட்டிக் கொள்வார்கள்; பின்பு அதன் மத்தியில் பளுவை ஏற்றி ஒரு கயிற்றின் துணையால் அதைக் கடலுக் குள் இறக்குவார்கள். அது தரை தட்டினவுடன், விட்ட கயிற்றை ஒரு படகில் பலமாய் இழுத்துக் கட்டிவிடுவார்கள். பின்பு பவளம் இருக்கும் இடங்

களின்மேல் படகைத் தள்ளிக்கொண்டே போவார்கள். இப்படித் தள்ளிக்கொண்டு போவதனால் பவளக் கொடிகளும், கிளைகளும் அறுபட்டு வலைகளில் சிக்கிக்கொள்ளும்.

பவளப் பூச்சியிலிருந்து உண்டாகும் பவளம் நவரத்தினங்களில் ஒன்றாக மதிக்கப்படுகிறது. நவரத்தினங்களாவன: கோமேதகம், நீலம், பவளம், புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வயிரம், வைடூரியம் என்பவை.

அற்பமாகத் தோன்றும் தேனீ இனிய தேனைக் கொடுக்கிறது. அழகில்லாத புழுவடிவாகிய பட்டுப் பூச்சியிலிருந்து அரசரும் ஆசைப்படும் அழகான பட்டு உண்டாகிறது. சமுத்திரத்தில் வசிக்கும் முத்துச்சிப்பி முதல்தரமான முத்தையும், பவளப்பூச்சி பளபளப்பான பவளத்தையும் பிறப்பிக்கின்றன. இயற்கையில் அற்பமாய்க் காணப்படும் பூச்சிகளிலிருந்துகூட மனிதர் மேன்மையாய் மதிக்கும் பொருட்கள் உண்டாகின்றன. அது என்ன ஆச்சரியம்! உலகத்தில் உபயோகமற்ற பொருள் ஒன்றும் இல்லை.

> தாமரை பொன்முத்துச் [1]சவரங்கோ ரோசனைபால்
> பூமருதேன் பட்டுப் புனுகுசவ்வா—தாம [2]மூன்மற்
> றெங்கே பிறந்தாலும் [3]எள்ளாரே, நல்லோர்கள்
> எங்கே பிறந்தாலு மென்? (நீதிவெண்பா)

பயிற்சி

1. நவரத்தினங்கள் எவை?
2. பவளம் எதிலிருந்து உற்பத்தியாகிறது?
3. பவளத்துக்குப் பேர்போன இடங்கள் எவை? அவற்றைப் பூகோளப்படத்தில் காட்டு.

---

[1] சவரம் = சாமரை. [2] அழல் = நெருப்பு. [3] எள்ளார் = இகழார்

4. சமுத்திரத்திலிருந்து பவளத்தை எடுக்கும் விதம் எப்படி?

5. இவற்றிற்கு அதே பொருளுள்ள வேறு வார்த்தைகள் சொல்லு:—

சவரம், அழல், எள்ளார்.

## இலக்கணம்

இவ்வாக்கியத்திலிருக்கும் வினைச்சொற்களை எடுத்தெழுது:—

'சமுத்திரத்தில் அழுகிக் கிடக்கும் அசுத்தமான பொருள்களைப் பவளப்பூச்சி தின்று வாழ்கின்றது.'

1. இந்த வினைச்சொற்களில் வாழ்கின்றது என்பது முற்றுப் பெற்ற அர்த்தத்தைக் கொடுக்கும் வினைச்சொல். ஆகையால் அதற்கு வினைமுற்று என்று பெயர். தின்று, அழுகிக் கிடக்கும் என்னும் இரண்டுவினைச்சொற்களும் முற்றுப்பெற்ற அர்த்தத்தைக் கொடாமல் குறைவாய் நிற்கின்றன. ஆகையால் அவை எச்சம் எனப்படும். (எச்சம் = குறைவு.) தின்று வாழ்கின்றது என்பதில் தின்று என்னும் எச்சம், வாழ்கின்றது என்னும் வினையைக்கொண்டு முடிவதால், அதற்கு வினையெச்சம் என்று பெயர். அழுகிக்கிடக்கும் என்னும் எச்சம், பொருள் என்னும் பெயரைக்கொண்டு முடிவதால் அதற்குப் பெயரேச்சம் என்று பெயர்.

(1) பெயர்ச்சோல்லைக் கோண்டு முடியும் எச்சவினை பெயரேச்சம்.

(2) வினைச்சோல்லைக் கோண்டு முடியும் எச்சவினை வினையேச்சம்.

(3) ஒரு வாக்கியத்தில் முற்றுப்பேற்ற அர்த்தத்தைக் கோடுக்கும் வினைச்சோல் வினைமுற்று.

2. இவ்வாக்கியங்களிலிருக்கும் பெயரெச்சம், வினையெச்சம், வினைமுற்றுக்களை எடுத்தெழுது:—

(1) 'பவளக்கொடிகளால் உண்டான பவளத் தீவுகள் பார்ப்பதற்கு அழகாயிருக்கும்.'

(2) 'பவளக்கொடிகள் அறுபட்டு வலைகளில் சிக்கிக் கொள்ளும்.'

(3) 'அற்பமாகத் தோன்றும் தேனீ இனிய தேனைக் கொடுக்கிறது.'

# 16. கிளி

ஆரம் பேணி
இயம்பு அண்டை

1. வட்டமா யுன்கழுத்தில்—ஒரு நாளும்
வாடாத ஆரமதை
இட்டவர் ஆரடியே—எனக்கும்
இயம்புவாயோ கிளியே.

2. மாணிக்க மூக்கழகும்—மரகத
வர்ண வடிவழகும்
காணக்கண் ணாயிரந்தான்—இருப்பினும்
கண்டு முடிந்திடுமோ?

3. பேசு மரகதமே—உனைத்தினம்
பேணி வளர்த்திடுவேன்
ஆசை யமுதமொழி அளிக்கநீ
அண்டையில் வந்திடாயோ?

—சி. தேசிகவிநாயகம் பிள்ளை

அரும்பத விளக்கம்

ஆரம் - மாலை. வாடாத ஆரம் - கிளியின் கழுத்திலுள்ள மாலைபோன்ற வட்டமான கோடு. இயம்புவாய் - சொல்லு வாய். மாணிக்கம், மரகதம் - நவ இரத்தினங்களுள் இரண்டு. மாணிக்கம் - சிவப்பு நிறமுடைய இரத்தினம். மரகதம் - பச்சை நிறமுடைய இரத்தினம். பேணி - உபசரித்து. அண்டையில் - அருகில்.

பயிற்சி

1. இச் செய்யுளை இயற்றிய புலவர் யார்?
2. கிளி அணிந்திருக்கும் வாடாத ஆரம் எது?
3. கிளிக்கு ஆரம் இட்டவர் யார்?
4. கிளியின் மூக்கு என்ன நிறம்?
5. கிளியின் அழகை எடுத்துரைக்க.
6. கிளியே, அண்டையில் வந்திடாயோ?—எதற்காக?
7. இச் செய்யுளின் திரண்ட கருத்து யாது?

இலக்கணம்

(அ) இச்செய்யுளிலுள்ள வினைச்சொற்களை எடுத்தெழுது.

(ஆ) பதம் பிரித்தெழுதுக:—

ஆரமதை, ஆரடியே, மூக்கழகு, அமுதமொழி.

# 17. திருட்டுக்கு மருந்து

| | | |
|---|---|---|
| பல்லாண்டுகள் | கொட்டிவிட்டது | கதறிக்கொண்டு |
| பக்தர் | வலி | நடுநடுங்கி |
| நுழைந்தனர் | ஐயோ | தென்னம்பிள்ளை |
| நறுக்கென்று | ஓட்டம்பிடித்தான் | வணங்கினான் |
| | வற்புறுத்தி | |

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த தரங்கம்பாடி என்னும் ஊரில் பல்லாண்டுகளுக்குமுன் சிறந்த பக்தர் ஒருவர் இருந்தார். அவர் ஏழைகளிடத்து இரக்கமுள்ளவர். தன்னைப்போல் மற்றவர்களை நேசித்துவந்தார். அவர் வீட்டுத் தோட்டத்தில் சில தென்னை மரங்கள் இருந்தன. ஒருநாள் இரவு பத்து மணிக்குமேல் இரண்டு திருடர்கள் தேங்காய்

களைத் திருடப் புறப்பட்டனர். திருடர் இருவரும் மெதுவாய் அவர் வீட்டுப் பக்கம் சென்றனர். வீட்டிலுள்ளோர் அனைவரும் தூங்கிவிட்டார்களா வென்று பார்த்தனர். தோட்டத்துக்குள் நுழைந்த னர். பின்பு ஒருவன் கீழே நின்முன். மற்றவன் நன்ருய்க் காய்த்திருந்த ஒரு தென்னைமரத்தின்மேல் ஏறினன். ஒரு தேங்காய்க் குலையை அறுத்துக் கயிற்றில் கட்டி, ஓசையில்லாமல் மெதுவாய்க் கீழே இறக்கினன். அப்போது தென்னைமரத்திலிருந்த ஒரு பெரிய தேள் நறுக்கென்று அவனைக் கொட்டி னது. வலி பொறுக்கமுடியாமல் 'ஐயோ! தேள் கொட்டி விட்டதே!' என்று கத்தினன். இச் சத்தம் பக்கத்து அறையில் படுத்திருந்த பக்தருக்குக் கேட் டது. உடனே அவர் எழுந்திருந்து தன் வேலைக் காரனை எழுப்பினர். 'தோட்டத்தில் யாரோ ஒருவன் தேள் கொட்டிவிட்டதாகக் கத்துகிருன், வா, அவனுக்கு மருந்து போடலாம்' என்ருர். கையில் விளக்கையும் தேள் மருந்தையும் எடுத்துக்கொண்டு, தோட்டத்துக்குள் நுழைந்தார்.

கீழே நின்ற திருடன் வெளிச்சத்தைக் கண்ட வுடன் ஓட்டம்பிடித்தான். மேலே ஏறினவன் கீழே இறங்கினல் என்ன நடக்குமோவென்று பயந் தான்; நடுநடுங்கினன். வேதனையையும் பொறுத்துக் கொண்டு, மட்டைக்குள் பதுங்கினன். ஆயினும், சில நிமிடங்களுக்குள் அந்தப் பக்தர் அவனைக் கண்டுபிடித்தார். திருடன் தேள் கொட்டின வலி பொறுக்கமாட்டாமல், அம்மா, ஆஆ! அப்பா ஆஆ! என்று மேல் இருந்தே கதறிக்கொண்டிருந்தான். அவர் திருடனைப்பார்த்து, 'அன்பனே! கீழே இறங்

கிவா; தேள் கடிக்கு மருந்து போடுகிறேன். நீ ஏன் இப்படி இரவில் வந்து மரத்தில் ஏறினுய்? உனக்குத் தேங்காய் வேண்டுமானுல் பகலில் வந்து என்னைக் கேட்கலாகாதா?' என்ருர். திருடன் அஞ்சினுன். 'ஐயனே! மன்னிக்கவேண்டும். செய்யத்தகாத காரியத்தைப் புத்தியில்லாமல் செய்துவிட்டேன்' என்று சொல்லிக்கொண்டே மரத்திலிருந்து கீழே இறங்கினுன். அவர் பாதத்தில் நெடுமரம்போல் விழுந்தான்.

அவர் அவனை எழுந்திருக்கச் செய்தார். மருந்து போட்டு விஷத்தைக் கீழே இறக்கினுர். விஷம் சற்று இறங்கினவுடன் வேலைக்காரனைக் கூப்பிட்டு, ஒரு கூடை கொண்டுவரச் செய்தார். கீழே கிடந்த தேங்காய்களையெல்லாம் அக்கூடையில் போடச் சொன்னுர். 'நீ இந்தத் தேங்காய்களை எடுத்துக் கொண்டு இவனேடுபோய் இவன் வீட்டில் வைத்து விட்டு வா. ஐயோ பாவம்! இவனுக்குத் தேங்காய் மேல் இருந்த ஆசையால் இவ்வளவு துன்பத்துக் குள்ளாகி விட்டானே' என்ருர். பின்பு, திருடனைப் பார்த்து, 'அன்பனே, உனக்குத் தேங்காய் வேண்டியதாயின், பகலில் வந்து என்னைக்கேள். இப்படி இரவில் வந்து திருடாதே: உனக்கு நிலம் இருந்தால் இரண்டு தென்னம்பிள்ளைகள் தருகிறேன். அவைகளைக் கொண்டுபோய் வைத்து வளர்த்துக் கொள்' என்று சில புத்திமதிகளைச் சொன்னுர்.

திருடன் அவரை வணங்கினுன். 'சுவாமி, எனக்குத் தேங்காய் வேண்டாம். என் குற்றத்தை மன்னிக்கவேண்டும்' என்று பணிவாகக் கேட்டான். ஆனுல் அந்தப் பக்தரோ தேங்காய்க் கூடையை எடுத்துக்கொண்டு போகவேண்டுமென்று வற்

புறுத்திஞர். தேங்காயைக் கொண்டுபோய் அவன் வீட்டில் கொடுத்துவிட்டு வரும்படி வேலேக்காரனே அனுப்பிஞர். இப்பெரியாருடைய இரக்கத்தையும், அன்பையும் பார்த்துத் திருடன் அன்று முதல் தன் திருட்டுத் தொழிலேவிட்டு நல்ல வழியில் நடந்தான்.

## பயிற்சி

1. இக்கதையை மௌனமாகப் படித்து, சுருக்கமாகச் சொல்லு.

2. பூகோளப் படத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தையும், தரங்கம்பாடி என்னும் ஊரையும் காட்டு.

## இலக்கணம்

1. 'தென்னேமரத்தில் இருந்த ஒரு பெரிய தேள் நறுக்கென்று அவனேக் கொட்டிவிட்டது.'

(1) இவ்வாக்கியத்தில் எழுவாய், பயனிலே சொல்லு.
(2) வினேமுற்று, வினேயெச்சம், பெயரெச்சம் கூறு.
(3) தென்னேமரத்தில், தேள், அவனே—இவற்றின் வேற்றுமை சொல்லு.

2. இம்மூன்று வாக்கியங்களேயும் கவனி:—

(1) திருடன் திருடப்போஞன்.
(2) திருடன் திருடப்போகிருன்.
(3) திருடன் திருடப்போவான்.

போஞன் என்பது முன் நடந்த காரியத்தையும், போகிருன் என்பது இப்பொழுது நடந்துகொண்டிருக்கிற காரியத்தையும், போவான் என்பது இனி நடக்கப்போகும் காரியத்தையும் காட்டுகின்றன. அவைகளுக்கு முறையே இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்று பெயர்.

3. கீழே கொடுத்திருக்கும் இறந்தகால வினைச்சொற்களுக்கு நிகழ்காலமும், எதிர்காலமும் எழுது:—

| இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
|---|---|---|
| இருந்தார் | | |
| விழுந்தான் | | |
| கொட்டினது | | |
| நடந்தார்கள் | | |
| கத்தினான் | | |
| நேசித்தார் | | |

# 18. உப்பு

| | | |
|---|---|---|
| வெவ்வேறு | மனையாள் | உப்புக்கண்டம் |
| மூட்டை | கரைந்து | ஊறுகாய் |
| கொங்கணி | மறைந்து | பூமி |
| சாவடி | நாற்றம் | வற்றி |
| | நனைந்து | |

ஒருநாள் எளிய குடியானவன் ஒருவன் மூன்று படி அரிசியையும் ஒரு படி உப்பையும் வெவ்வேறு மூட்டையாகக் கட்டிப் பெரிய மூட்டையைக் கீழும் சிறிய மூட்டையை மேலுமாகத் தலையில் வைத்துக் கொண்டு, ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குப் போனான். சிறிது தூரம் சென்றவுடனே சோவென்று மழைபெய்யத் தொடங்கியது. ஏழைக் குடியானவனிடத்தில் குடையும் இல்லை, கொங் கணியும் இல்லை, வழியில் தங்குவதற்குச் சத்திர மாவது சாவடியாவது கிடையாது. என்ன செய் வான்! மழையில் நனைந்துகொண்டே ஊர்போய்ச் சேர்ந்தான். சேர்ந்தவுடன் மனையாளைப் பார்த்து, 'இதோ மூன்று படி அரிசியும் ஒரு படி உப்பும் இருக்கின்றன, எடுத்துக்கொள்' என்று சொன்னான். அவள் மூட்டைகளை அவிழ்த்துப் பார்க்கும் பொழுது, மேல் மூட்டையிலிருந்த உப்பெல்லாங்

கரைந்துபோய்விட்டதாகக் கண்டு மிகவும் வருத்தப் பட்டாள். உப்பு சிறு கற்கள் போன்ற கடினமான பொருளாகக் காணப்பட்டாலும் எளிதாய் நீரில் கரையக்கூடியது.

நாம் உண்ணும் பொருள்கள் சுவையாயிருப் பதற்காகச் சிறிது உப்புச் சேர்த்துக்கொள்ளு கிருேம். உப்பில்லாப் பண்டம் சப்பென்றிருக்கிற தென்றும், உப்பு அதிகமாகிவிட்டால் உப்புக் கரிக் கிறதென்றும் நாம் சொல்லுகிருேம். ஆனுல் உப்பு நீரில் கரைந்து உணவுப்பொருள்களில் கலந்து மறைந்துபோனுல் மட்டும் சுவை தருமேயன்றிக் கரையாமலிருந்தால் சுவை தரமாட்டாது.

உப்பு, உணவுப்பண்டங்களுக்குச் சுவை கொடுப் பது மட்டுமின்றி நாற்றமெடுத்துக் கெட்டுப்போகா மல் அவைகளைக் காப்பாற்றுகிறது. ஆகவே, உப்புக்கண்டம், ஊறுகாய் முதலியவற்றிற்கு உப் பிட்டு வைக்கிருர்கள். ‘உப்பில்லாப் பண்டத்தைக் குப்பையிலே போடு,’ ‘உப்பிட்டாரை உள்ளளவும் நினை’ என்னும் பழமொழிகள் உப்பு மிகச் சிறந்த பொருள் என்பதைக் காட்டுகின்றன. இயேசு பெருமான் தமது சீடரிடத்தில் உப்புக்குரிய குணங் கள் யாவும் இருக்கவேண்டும் என்பதைக் கருதி ‘நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்’ என்று சொல்லி யிருக்கிருர்.

உப்பு கடல் நீரிலிருந்து எடுக்கப்படுகிறது. கடற் கரைகளில் பாத்திகள் கட்டிக் கடல்நீரை இறைத் துத் தேக்கிவைப்பார்கள். அந்த உவர்நீர் சூரிய வெப்பத்தால் வற்றியபின், பாத்திகளில் உப்பு மட்டும் தங்கி நிற்கும். உப்பு விளையும் இடத்துக்கு உப்பளம் என்று பெயர்.

பயிற்சி

1. உப்பின் குணம் யாது?

2. உப்பு எப்படி எடுக்கப்படுகிறது?

3. 'நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்' என்றதன் கருத்து என்ன?

4. இத்தொடர்களை வாக்கியங்களில் அமைத்துச் சொல்லு:—

நனைந்துகொண்டு, கரையாமல், நாற்றமெடுத்து, சமுத்திரக் கரை?

5. கரை என்பதற்கு இரண்டு அர்த்தங்கள் கூறு.

## இலக்கணம்

1. பின்வரும் வாக்கியங்களிலுள்ள ஒவ்வொரு வினைச் சொல்லும் எந்தெந்தக் காலத்தைக் குறிக்கிறது? அவை ஒவ்வொன்றுக்கும் மற்றக் காலங்களைச் சொல்லு.

(1) மழை பெய்ய ஆரம்பித்தது.
(2) அவன் என்ன செய்வான்?
(3) உப்பு இருக்கிறது.
(4) மனையாள் வருத்தப்பட்டாள்.
(5) உப்பு கடல்நீரிலிருந்து எடுக்கப்படுகிறது.

2. இவ்வாக்கியங்களைக் கவனி:—

(1) அவன் ஊர்போய்ச் சேர்ந்தான்.
(2) அவன் ஊர்போய்ச் சேரவில்லை.

முதல் வாக்கியம் நடைபெற்ற ஒரு காரியத்தைக் காட்டுகிறது. இரண்டாவது வாக்கியம் அக்காரியம் நடைபெறவில்லையென்று தெரிவிக்கிறது.

3. கீழ்க்கண்ட வாக்கியங்களை இரண்டாம் வாக்கியத்தைப்போல் மாற்றி எழுது:—

(1) அவள் மூட்டைகளை அவிழ்த்துப் பார்த்தாள்.
(2) அவள் விசனப்பட்டாள்.
(3) அவன் சத்திரத்தில் தங்கினான்.
(4) கடல்நீரை இறைப்பார்கள்.
(5) பாத்திகளில் விடுவார்கள்.

பின்வரும் வாக்கியங்களிலுள்ள பயனிலைகள் எந்தெந்தக் காலத்தைக் குறிக்கின்றன?—

(1) ஜெர்மனி போரைத் தொடங்கியது.

(2) நாம் உப்பு சேர்த்துக்கொள்ளுகிறோம்.

(3) அவள் எந்த உயிரையும் தன்னுயிர்போல் எண்ணி உபகாரஞ்செய்தாள்.

(4) நாளைக்கு மழை பெய்யும்.




# 19. முதல்தர முத்துக்கொட்டை

| | | |
|---|---|---|
| தரம் | ஆணி | திகைத்து |
| முத்துக்கொட்டை | கணக்கப்பிள்ளை | திடமானது |
| நாட்டுப்புறம் | சிறுவன் | கலப்பு |
| பீப்பாய் | பரிசோதித்து | வணிகன் |
| ஏற்றுமதி | மலிவு | வாணிபம் |
| | நட்டம் | |

தாராபுரம் என்னும் ஊரில் முத்துக்கொட்டை வியாபாரி ஒருவன் இருந்தான். அவன் பலவகை முத்துக்கொட்டைகளை நாட்டுப்புறங்களிலிருந்து

குறைந்த விலைக்கு வாங்கி, பீப்பாய்களில் அடைத்துப் பிறநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்து, பணம் சம்பாதித்துக்கொண்டிருந்தான். அவன் முத்துக் கொட்டைகளை மிகத் தந்திரமாகப் பீப்பாய்களில் அடைப்பான். பீப்பாயின் மேற்பக்கத்திலும் அடிப் பக்கத்திலும் முதல்தரமான கொட்டைகளையும், நடுவில் தாழ்ந்த வகைக் கொட்டைகளையும் போட்டு மூடி ஆணி அடித்துவிடுவான். வாங்குகிற வியாபாரிகள் எந்தப் பக்கத்தைத் திறந்து பார்த்தாலும், முதல்தரமான கொட்டைகள் இருப்பதைக்கண்டு உயர்ந்த விலைகொடுத்து வாங்கிப் போவார்கள்.

ஒருநாள் முத்துக்கொட்டைகளைப் பீப்பாய்களில் அடைக்கும்பொழுது அவனுடைய கணக்கப்பிள்ளையும் கூட இருந்தான். அவன் உண்மையுள்ள சிறுவன். 'முதல்தர முத்துக்கோட்டை' என்று பெரிய எழுத்துக்களால் அச்சடித்து வைத்திருந்த சீட்டுகளை முத்துக்கொட்டை நிறைந்த பீப்பாயின்மேல் ஒட்டும்படி வியாபாரி கட்டளையிட்டான். கணக்கப்பிள்ளை அவ்வாறு செய்ய விரும்பவில்லை. முதலாளியிடம் அது சரியல்லவென்று கூறினன். முதலாளியோ இவன் பேச்சைக் கேட்கவில்லை. எல்லாப் பீப்பாய்களிலும் 'முதல்தர முத்துக்கொட்டை' என்னும் சீட்டு ஒட்டப்பட்டது.

சில நாட்களுக்குப்பின், பெரிய வியாபாரி ஒருவன் முத்துக்கொட்டை வாங்க இந்தக் கடைக்கு வந்தான். அவனுக்கு முதல்தரமான முத்துக் கொட்டை காட்டப்பட்டது. அவன் அவைகளைப் பார்த்து மிக மகிழ்ந்து, பீப்பாய்களில்

அடைத்துவைத்திருக்கும் கொட்டை முத்துக்களி லும் சிலவற்றைப் பரிசோதித்துப் பார்க்கும்படி விரும்பினுன். முதலாளி கணக்கப்பிள்ளையைப் பார்த்து வியாபாரிக்கு முத்துக்கொட்டையைக் காட்டும்படி சொன்னுன். கணக்கப்பிள்ளை முதலாளி உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து வியாபாரியைக் கூட்டிக் கொண்டுபோய்க் காண்பித்தான். வியாபாரி பீப்பா யின் ஒரு பக்கத்தைத் திறந்து பார்த்தான். முத்து முதல்தரமானதாகவே இருந்தது. உடனே வியா பாரி சிறுவனைப் பார்த்து, "இந்தக்கொட்டை முத்து முதல்தரமானதுதான். ஆனுல் நீங்கள் சொல்லுகிற விலை அதிக மலிவாய்க் காணப்படுகிறது. இந்தப் பீப்பாயில் மேலே இருக்கிறதுபோல அடிவரையும் முழுவதும் ஒரே விதமாய் இருக்குமா?" என்று கேட்டான். சிறுவன் தன் முதலாளியினுடைய வியாபாரம் கெட்டுப்போகும் என்று எண்ணி ஒரு பொய் சொல்லலாமா என்று சிறிது நேரம் திகைத்து நின்ருன். பின்பு, 'இறந்தாலும் பொய் தன்னைச் சொல்லவேண்டாம்' என்று நான் படித் திருக்கிறேன் அல்லவா! ஆகையால் நான் உண் மையே பேசவேண்டும் என்று மனத்தில் முடிவு செய்துகொண்டு, திடமனதுடன், தைரியமாய், 'எல் லாம் முதல்தரமான முத்தல்ல, தாழ்ந்த முத்துக் களும் நடுவில் கலந்திருக்கும்' என்று உண்மையைச் சொன்னுன். வியாபாரி, 'அப்படியானுல் இது எனக்கு வேண்டாம்' என்று சொல்லிப் போய்விட் டான். கணக்கப்பிள்ளை கடைக்குத் திரும்ப வந்த வுடன் முதலாளி அவனைப் பார்த்து 'அந்த வியா பாரி எத்தனை பீப்பாய்கள் வாங்கிக்கொண்டான்?' என்ருன். அதற்கு அவன், 'அவ்வியாபாரி ஒன்றும்

வாங்கவில்லை. ஏனெனில் அவன் உண்மையைக் கேட்டான். நானும் உண்மையைச் சொல்லிவிட்டேன். ஆகையால் கலப்புக் கொட்டைமுத்து தனக்கு வேண்டியதில்லையென்று அவன் போய் விட்டான்' என மொழிந்தான். உடனே முதலாளி அதிகக் கோபமடைந்து, கணக்கப்பிள்ளையைப் பலவிதமாய்த் திட்டி, நீ இந்த வேலைக்கு உதவமாட்டாய் எனக் கூறி அவனை வேலையை விட்டு நீக்கி விட்டான்.

வணிகனுக்கு வரவர வாணிபம் குறைந்து கொண்டே வந்தது. அவனிடத்தில் முத்துக் கொட்டை வாங்கினவர்கள் எல்லோரும், அவன் பொய்யனென்று தெரிந்து, அவனிடத்தில் வியாபாரம் செய்வதை நிறுத்தினார்கள். அதனால் அவன் நட்டமடைந்து கடையை மூட நேர்ந்தது.

சில மாதங்களுக்குப் பின், முதலாளி மறுபடியும் இந்தக் கணக்கப்பிள்ளையை வரவழைத்து 'நாங்கள் புதிதாய் வேறொரு கடை திறக்கப்போகிறோம். அதற்கு உண்மையுள்ள ஒரு கணக்கப்பிள்ளை வேண்டும். அதற்கு நீதான் ஏற்றவன். உனக்கு இப்போது கிடைக்கிற சம்பளத்தைவிட இரண்டுமடங்கு சம்பளம் தருகிறேன். தயவுசெய்து வேலையை ஒப்புக்கொள்' என்று கேட்டுக்கொண்டான். அப்படியே அவன் வேலையை ஒப்புக் கொண்டான். உண்மையுடன் வியாபாரம் நடத்தி, அக்கடையை மிக உயர்ந்த நிலைக்குக் கொண்டுவந்தான். அதற்கு அவனே முதல் அதிகாரியுமானான். வியாபாரிகள் எல்லாராலும் அவன் மிகவும் மதிக்கப்பட்டான்.

பயிற்சி

1. இக்கதையை மௌனமாகப் படித்துச் சுருக்கமாகச் சொல்லு.

2. இக்கதையிலிருந்து கற்றுக்கொள்ளும் நீதி என்ன?

3. முத்து, முற்று, முட்டு—இவற்றின் வித்தியாசம் என்ன? ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வாக்கியம் சொல்லு.

இலக்கணம்

வணிகனை—இது என்ன வேற்றுமை? இதற்குரிய மற்ற வேற்றுமைகளைச் சொல்லுக. ஒவ்வொன்றுக்கும் உதாரண மாக ஒவ்வொரு வாக்கியம் எழுதுக.




# 20. சாரணச் சிறுவர்

| | | |
|---|---|---|
| சாரணர் | கண்ணுங்கருத்தும் | சரிவர |
| முயலுகிறார்கள் | வேவுகாரர் | கைம்மாறு |
| படை | தோற்றுவிக்க | வீண்செலவு |
| கேடுகள் | விசுவாசம் | இன்றியமையாதது |

உடற்பயிற்சி

பொதுவாக நமது பள்ளிக்கூடங்களில் படித்து வரும் மாணக்கர் புத்தகங்களிலிருக்கும் பற்பல செய்திகளைக் கற்று, ஆண்டுதோறும் பரீட்சையில் தேறிக்கொண்டுவர முயலுகிறார்கள். இது மிக வியக்கத்தக்கதாம். ஆனால் பரீட்சையில் தேறுவதற்காக மாத்திரம் படிக்கும் புத்தகப் படிப்பைவிட மேலான படிப்பு மற்றொன்றிருக்கிறது. அதற்கு நல்லொழுக்கப் படிப்பு என்று பெயர். நல்லொழுக்கத்திலும், பரோபகார சிந்தையிலும், நாளாவட்டத்தில் வளர்ந்து வரும் மாணக்கனே பரீட்சையில் மாத்திரம் தேறிக்கொண்டு வருகிற மாணக்கனை விடச் சிறந்தவனாக மதிக்கப்படுகிறான்.

தற்காலத்தில் மாணக்கருக்குள் நல்லொழுக்கம் ஏற்படும்பொருட்டுப் பாடசாலைகளில் பல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள. தங்கள் நாட்டிற்காகவும், பொது நன்மைக்காகவும் சிறுவர் கூடப் பல இடங்களில் வேலை செய்துவருகின்றனர். அவர்கள் சுய நன்மையைக் கருதாமல் பிறர் நன்மையையே கருதி உழைக்கிறார்கள். சம்பளமின்றி மகிழ்ச்சியாக எல்லோருக்கும் உதவி செய்கிறார்கள். இவ்வேலை செய்து வரும் மாணக்கரின் கூட்டத்துக்குச் சாரணச் சிறுவர் படை என்று பெயர். அதாவது பிறருக்குண்டாகும் துன்பங்களையும் கேடுகளையும் நீக்கும் பொருட்டுக் கண்ணுங்கருத்துமாய் வேவுகாரரைப் போல் முன் செல்லும் சிறுவர்கள் என்பது அவற்றின் பொருள்.

சாரணச் சிறுவர் என்றழைக்கப்படும் படை முதலாவது ஆப்பிரிக்கா கண்டத்தில் ஜெனரல் பேடன் பவெல் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. இப்

பொழுது சிறிது சிறிதாக இது உலகமுழுவதும் பரவிக்கொண்டு வருகிறது. நமது நாட்டிலுங் கூடப் பெரிய பாடசாலைகள் ஒவ்வொன்றிலும் 'சாரணச் சிறுவர்' கூட்டத்தைப் பார்க்கலாம்.

சாரணர் படையைச் சேர்ந்த மாணுக்கன் ஒவ்வொருவனிடத்திலும் நாட்டுப் பற்றும், தன் கௌரவத்தைக் காத்துக்கொள்ள வேண்டுமென்கிற எண்ணமும், ஊருக்காக உழைக்கவேண்டுமென்கிற ஆசையும் இருக்கவேண்டும். கடவுளுக்கும், மக்களுக்கும், தன் தேசத்துக்கும், அரசனுக்கும், பெற்ருேருக்கும், பெரியோருக்கும் செய்யவேண்டிய கடமைகளைச் சரிவரச் செய்யப் பிரயாசப்படவேண்டும். தன் பேரும் தன் கல்விச்சாலையின் பேரும், தன் படையின்பேரும் கெட்டுப்போகாதபடி உண்மையுள்ளவனுய் நடந்து கொள்ளவேண்டும். சாதி மத பேதமின்றி, யாவரிடத்திலும் அன்பும் நட்பும் மரியாதையும் உள்ளவராய் நடந்துகொண்டு, கைம்மாறு கருதாமல் மகிழ்வுடன் அவர்களுக்கு உதவி செய்ய எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கவேண்டும். நடை, உடை, பாவனையில் தூயவனுயும், வீரமுள்ளவனுயும் வீண் செலவு செய்யாதவனுயும், முகமலர்ச்சியுள்ளவனுயும் இருக்கவேண்டும்.

பிறருக்காகஉழைக்கவேண்டும்என்னும்எண்ணமுடையவன் உடல் வலியுள்ளவனுய் இருக்கவேண்டியது இன்றியமையாததாம். பலவீனனுயாவது பிணியாளனுகவாவது இருந்தால், அவனுல் அவ்வளவு நன்மை செய்யமுடியாது. ஆகையால், இப்படையைச் சேர்ந்த ஒவ்வொரு மாணுக்கனும் பலவிதமான விளையாட்டுகள் முதலிய உடற்பயிற்சி

கள் செய்து பழகவேண்டும். தண்ணீரில் நன்ருய் நீந்துவதற்கும் கற்றுக்கொள்ளவேண்டும். நீச்சல் தெரிந்தால்தான் நீரில் விழுந்தவர்களுக்கு உதவி செய்யக்கூடும். காயப்பட்டவர், நெருப்பில் அகப் பட்டவர், பிணியாளர் முதலியவர்களுக்குச் சமயத் திற்கேற்ற உதவி செய்யவும் தெரியவேண்டும். கைத்தொழில்களிலும் சில கற்றுக்கொள்வது நலம்.

இத்தகைய சங்கங்கள் ஏற்படுவதால் நாட்டிற்கு நன்மை விளையும்.

### பயிற்சி

1. சாரணச் சிறுவர் படை முதலாவது யாரால் தோற்று விக்கப்பட்டது?

2. அவர்களுடைய முக்கிய கொள்கை என்ன?

### இலக்கணம்

1. கைத்தொழிலிலும் சில கற்றுக்கொள்வது நலம். இவ் வாக்கியத்தில் எழுவாய் எது? பயனிலை எது?

2. கோடிட்ட இடங்களில், கீழுள்ள சொற்களுள் சரி யான சொற்களை அமைத்து எழுதுக.

சாரணச் சிறுவர், சாரணச் சிறுவரை, சாரணச் சிறுவ ரால், சாரணச் சிறுவருக்கு, சாரணச் சிறுவரில், சாரணச் சிறுவருடைய, சாரணச் சிறுவரிடத்தில், சாரணச் சிறுவரே.

(1) பிறருக்கு உதவிசெய்ய எப்பொழுதும் ஆயத்தமா யிருக்கவேண்டும் என்பதே —— முக்கிய கொள்கை.

(2) ஊருக்காக உழைக்கவேண்டும் என்கிற ஆசை —— அதிகம் உண்டு.

(3) —— சாதி மதபேதம் கிடையாது.

(4) —— சகலருக்கும் சகாயம் செய்கிருர்கள்.

(5) அக்கினியில் அகப்பட்ட குழந்தை —— காப்பாற் றப்பட்டது.

(6) உற்சவத்தில் உதவிசெய்ய —— வரவழைத்தார்கள்.

(7) பலருக்கு நன்ருய் நீந்தத்தெரியும்.

(8) ——, உங்களுக்கு வந்தனம்.

# 21. மௌன வாசிப்புப் பயிற்சி—3

| | | |
|---|---|---|
| மதம் | வீரன் | அரும்பொருள் |
| கவர்ந்து | கன்னெஞ்சன் | முழங்காற்படியிட்டு |
| கீர்த்தி | துயரக்கடல் | புத்திரன் |
| ஆண்மை | காணிக்கை | மும்முறை |
| உடல்உரம் | பிரார்த்தித்து | அடைக்கும் தாள் |

பல ஆண்டுகளுக்குமுன் நமது தேசத்தில் பேபர் என்னும் பெயருடைய ஓர் அரசர் இருந்தார். அவர் முகம்மதிய மதத்தைச் சேர்ந்தவர். மிக நல்லவர். குடிகளுக்குப் பல நன்மைகள் செய்து அவர்கள் மனத்தைத் கவர்ந்து கொண்டவர். கீர்த்தி பெற்றவர்.

பேபர் என்பதற்குச் சிங்கம் என்பது பொருள். பேபர் என்னும் பெயர் அவருக்கே தகும். ஏனெனில், அவர் சிங்கத்தைப்போன்ற தேகபலமும், ஆண்மையும், உடல் உரமும் உள்ளவர். அவர் இரண்டு பெரிய மனிதர்களைத் தமது இரு தோள்களிலும் தூக்கி வைத்துக்கொண்டு ஓடக்கூடியவர். ஒரேநாளில் நூறுமைல் தூரம் குதிரைச் சவாரி செய்யக்கூடியவர். பெரு வெள்ளத்திலும் நன்ருய் நீந்திச்செல்லக்கூடியவர். பேபர் இவ்வளவு தைரியமும், பலமுமுள்ள வீரனுயிருந்தபோதிலும் கன்

னெஞ்சரல்லர். இரக்கம் நிறைந்தவர்; இளகிய மன முடையவர்.



பேபருக்கு அருமையான ஒரு குமாரன் இருந்தார். அவருக்கு ஹுமாயூன் என்று பெயர். ஒரு முறை ஹுமாயூன் நோய்வாய்ப்பட்டுச் சாகும் நிலையில் இருந்தார். அதைக்கண்டு பேபர் மிக வருந்தித் துயரக்கடலில் மூழ்கியிருந்தார். அப்பொழுது ஒருவர் அவரைப் பார்த்து, 'அரசே! தங்களுக்கு அருமையாயிருக்கும் ஏதாவது ஒரு பொருளைக் கோவிலுக்குக் காணிக்கையாகக் கொடுப்பதாகப்

பிரார்த்தித்துக்கொள்ளுங்கள். எல்லாம் வல்ல இறைவன் தங்கள் குமாரனைக் காப்பாற்றுவார்' என்று சொன்னார். பேபர் தனக்கு அருமையான பொருள் எதுவென்று ஆலோசித்துப் பார்த்தார். அப்பொழுது அருகில் இருந்த மந்திரி, 'தங்களுக்கு ஆக்ராவில் கிடைத்த வைரம் அதிக விலைபெற்றது, மிகவும் அருமையானது' என்று சொன்னார். அதைக் கேட்ட பேபர், 'ஆம், நீர் சொல்வது உண்மைதான். அந்த வைரம் அரும் பொருள்தான். ஆனால், அந்த வைரத்தைப் பார்க்கிலும் என் உயிர் எனக்கு மிக அருமையானது. ஆகையால், கடவுள் என் மகன் உயிரைக் காப்பாற்றுவாரானால், அதற்குப் பதிலாக என் உயிரைக் கொடுப்பேன்' என்று சொன்னார்.

பின்பு பேபர், ஹுமாயூன் படுக்கைக்கு அருகில் முழங்கால்படியிட்டு, கடவுள் தம்மை எடுத்துக் கொண்டு, தமது புத்திரனைக் காப்பாற்றவேண்டும் என்று மிகுந்த ஊக்கத்தோடே இறைஞ்சினார். இறை வணக்கம் முடித்தபின் ஹுமாயூனுடைய படுக்கையை மும்முறை சுற்றிவந்து, 'ஹுமாயூனுடைய நோயை நான் ஏற்றுக்கொண்டேன், நான் ஏற்றுக்கொண்டேன்' என்று சொன்னார். அன்று முதல் ஹுமாயூனுக்கு நோய் குறைந்து, சில நாட்களுக்குள் உடல் நலம் உண்டாயிற்று. பேபர் வியாதிப்பட்டு, நாளுக்குநாள் உடல் மெலிந்து, இறந்தார்.

பேபர் தன் மகன்மேற் கொண்ட அன்பினால் தம் உயிரைக் கொடுத்துப் பாதுகாத்தார். இதனால்

தான் 'அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாள்' என்று திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார்.

## பயிற்சி

1. இக்கதையை மௌனமாகப் படித்துச் சுருக்கமாகச் சொல்லு.

2. பேபர் எந்த மதத்தைச் சேர்ந்தவர்?

3. அந்த மதத்தை நிலைநாட்டியவர் எவர்?

4. பேபர் என்ற வார்த்தைக்கு அர்த்தம் என்ன? அவர் அந்தப் பெயருக்குத் தகுதியுள்ளவர்தானா?

5. திருவள்ளுவரைப்பற்றி உனக்கு என்ன தெரியும்? அவர் என்ன தொழில் செய்துவந்தார்? அவர் எழுதிய முக்கியமான நூல் எது?

## இலக்கணம்

1. 'அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாள்.' இதன் பொருள் என்ன? இவ்வாக்கியத்தை அடைத்துக் காட்டியிருக்குங் குறிகளைக் கவனி. (' ') இவற்றிற்கு மேற்கோள் குறிகள் என்று பெயர். பேசினவருடைய சொற்களை அப்படியே எடுத்துரைக்கும்பொழுது இக்குறிகளை உபயோகிக்கிறோம்.

2. பின்வரும் வாக்கியத்தில் தகுந்த இடங்களில் கால் புள்ளி, முற்றுப்புள்ளி, மேற்கோள்குறிகள்—வைத்துக் காட்டு.

பேபர் அரசர் ஹுமாயூனுடைய படுக்கையை மும்முறை சுற்றிவந்து ஹுமாயூனுடைய வியாதியை நான் ஏற்றுக் கொண்டேன் நான் ஏற்றுக்கொண்டேன் என்று சொன்னார்.

# 22. தோல்

| | | |
|---|---|---|
| மேலுறை | மயிர்க்கால் | ஆடை |
| அடுக்குகள் | வியர்வைக்கோளம் | குளிர்ச்சி |
| புறத்தோல் | நெய்க்கோளம் | சொரசொரப்பு |
| அகத்தோல் | கோடிக்கணக்கு | வழவழப்பு |
| நரம்பு | கழிவுப்பொருள் | வன்மை |
| இரத்தக்குழாய் | நுண்ணிய | மென்மை |
| கிழி | சிரங்கு | தாமிரம் |
| | தூய | |

நமது உடல் முழுவதையும் மூடிக்கொண்டிருக்கும் மேலுறைக்குத் தோல் என்று பெயர். அது இரண்டு அடுக்குகளாக அமைந்திருக்கிறது. மேலே காணப்படும் தோலுக்குப் புறத்தோல் என்றும், அடியிலுள்ள தோலுக்கு அகத்தோல் என்றும் பெயர்.

புறத்தோலில் நரம்புகளாவது, இரத்தக் குழாய்களாவது கிடையா. அது மிக மென்மையானது; நாம் உடம்பைத் தேய்க்கத் தேய்க்கத் தூளாக உதிர்ந்து திரும்பவும் வளரும் தன்மையுடையது.

அகத்தோலில் நரம்புகளும், இரத்தக் குழாய்களும் நிறைந்திருப்பதால், நமது உடலின்மேல் ஒரு சிறு எறும்பு கடித்தாலும், ஈ உட்கார்ந்தாலும், உடனே உணர்ந்துகொள்ளும் தன்மை அதற்கு உண்டு. ஒரு சிறிய காயம்பட்டால், உடனே இரத்தம் வருவதுடன் நோவும் உண்டாகும். அகத்தோல் தடிப்பானது. அதை எளிதில் கிழிக்க இயலாது. நமது உடம்பில் காணப்படும் மயிர்

களின் வேர்கள், அதாவது மயிர்க்கால்கள் இந்த அகத்தோலில் தானிருக்கின்றன. அதில் அநேக வியர்வைக் கோளங்களும், நெய்க்கோளங்களும், கோடிக்கணக்கான துவாரங்களும் உண்டு.




1. புறத்தோல்
2. அகத்தோல்
3. வியர்வைப்பைகள்
4. தோலுக்குக் கீழுள்ள கொழுப்பு

வியர்வைக்கோளங்களிலிருந்து தேகத்திலுள்ள கழிவுப்பொருள்கள் வியர்வை வடிவமாய்ப் பிரிந்து நுண்ணிய துவாரங்களின் வழியாய் வெளிப்படுகின்றன. நெய்க் கோளங்களிலிருந்து கசிந்து வரும் எண்ணெய்ப் பதார்த்தம் நமது தோலை மென்மையாக்கி, அதற்குப் பளபளப்பைக் கொடுக்கிறது. இந்த எண்ணெய்ப் பொருள் இல்லா விட்டால், நமது தோல் உலர்ந்து வெடித்துப்போகும்.

தோலிலுள்ள துவாரங்கள் அடைபட்டால் எண்ணெய்ப் பொருளும், கழிவுப் பொருள்களும் வெளியே வரக்கூடாமல் உடலிற்குள்ளே நின்று விடும். அப்பொழுது சிரங்கு முதலிய நோய்கள் பல உண்டாகும். ஆகையால், நாம் நாடோறும் குளித்து, தூய ஆடைகளை உடுத்து, தோலிலிருக்கும் துவாரங்கள் அடைப்பட்டுப் போகாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும்.

தோல் நம்முடைய எல்லா உறுப்புக்களையும் மூடிக் காப்பாற்றுகிறது. அது உடலிலுள்ள கழி வுப்பொருள்களை வெளியேற்றுங் கருவியாக மட்டு மின்றி, உணர்ச்சிக் கருவியாகவுமிருக்கிறது. தோலின் உதவியினால் தான் பொருள்களின் வெப் பம், குளிர்ச்சி, சொரசொரப்பு, வழவழப்பு, வன்மை, மென்மை முதலிய குணங்களை யறிந்து கொள்ளுகிறோம்.

பெரும்பாலும் குளிர் தேசத்தில் வசிப்பவர்கள் வெண்மை நிறத்துடன் விளங்குவர். வெப்பமான தேசத்தில் வசிப்பவர்கள் கறுப்பாயிருப்பர். அகத் தோலுக்கும் புறத்தோலுக்கும் இடையில் உடலிற்கு நிறம்கொடுக்கும் ஒரு பொருள் இருக்கிறது. அந்தப் பொருள் எல்லா மனிதருக்கும் ஒரேவிதமாயிராமல் ஒவ்வொருவருக்கும் வேறுபட்டிருக்கும். ஆகை யால், ஐரோப்பியர் வெண்ணிறமாயும், அமெரிக்க இந்தியர் தாமிர நிறமாயும், ஆப்பிரிக்க நீகிரோவர் கறுப்பு நிறமாயுமிருக்கின்றனர்.

பயிற்சி

1. அகத்தோலுக்கும் புறத்தோலுக்கும் என்ன வித்தி யாசம்?

2. தோலுக்குப் பளபளப்பு எதினுல் உண்டாகிறது?

3. தோலிலுள்ள துவாரங்கள் அடைப்பட்டுப்போனுல் என்ன கெடுதல்கள் விளையும்?

4. தோல் மனிதருக்கு எவ்விதமாக உபயோகப்படுகிறது?

5. தேகத்திற்கு நிறம் கொடுக்கும் பொருள் எங்கிருக்கிறது? மனிதரின் நிறவேறுபாட்டிற்குக் காரணம் என்ன?

6. இவற்றிற்கு எதிர்ப்பதங்கள் சொல்லு:—

மென்மை, வெப்பம், சொரசொரப்பு, வன்மை, குளிர், நிழல், அகம்.

7. இவற்றிற்கு அதே பொருளுள்ள வேறு வார்த்தைகள் சொல்லு:—

மயிர், நுண்ணிய.

## இலக்கணம்

குளிர்தேசத்தில் வசிப்பவர்கள் வெண்மையாயும், வெப்பமான தேசத்தில் வசிப்பவர்கள் கறுப்பாயும் இருப்பார்கள்.

1. இவ்வாக்கியத்தை இரண்டு வாக்கியங்களாகப் பிரித்து எழுது.

2. எழுவாயை ஆண்பால் ஒருமையாக்கி இரண்டு வாக்கியங்களாக எழுது.

3. தேசத்தில்—இதிலுள்ள வேற்றுமை உருபு யாது?

அது எந்த வேற்றுமை?

# 23. தமிழ்ப் பணி

| | |
|---|---|
| திருப்பணி | துறந்திடும் |
| தரணி | தகவுடையாள் |
| அணி | அகிலம் |
| மன்னுயிர் | நுகர்ந்திட |

1. தமிழன் னைத்திருப் பணிசெய்வோம்
தரணிக் கேஒரு அணிசெய்வோம்
அமிழ்தத் தமிழ்மொழி என்றாரே!
அப்பெயர் குறைவது நன்றாமோ?

2. அன்பு நிறைந்தவள் தமிழன்னை,
அருளை அறிந்தவள் தமிழன்னை,
இன்பக் கலைகள் யாவையுமே
ஈன்று வளர்த்திடும் தேவியவள்.

3. மன்னுயிர் அனைத்தையும் தன்னுயிர்போல்
மதிப்பது தமிழ்மொழி முன்னுரையாம்
தன்னலம் துறந்திடும் தகவுடையாள்
தவநெறி வாழ்க்கையின் புகழுடையாள்.

4. தமிழன் என்பதை மறக்காதே
தாய்மொழிப் பெருமையைத் துறக்காதே
'அமிழ்தம் தமிழ்மொழி' ஐயமில்லை
அகிலம் நுகர்ந்திடச் செய்திடுவோம்.

—நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை.

அரும்பத விளக்கம்

திருப்பணி - சிறந்த சேவை. தரணிக்கே - உலகுக்கே. அணி - அழகு. ஈன்று - பிறப்பித்து. மன்னுயிர் - நிலை பெற்ற உயிர். தகவுடையாள் - பெருமையுடையவள். அகிலம் - உலகம். நுகர்ந்திட - அனுபவிக்க.

## பயிற்சி

1. தமிழ் என்ற பதத்தின் பொருள் யாது?

2. தமிழ் எவ்வாறு இனியது?

3. தமிழன்னையின் சிறப்புக்கள் யாவை?

4. நீ எதனை மறக்கக் கூடாது?

5. எதனைத் துறக்கக் கூடாது?

6. எதில் சிறிதும் ஐயமில்லை?

7. தமிழன்னைக்குச் செய்யவேண்டிய சேவைகள் யாவை?

8. இச்செய்யுளின் திரண்ட கருத்தினை எழுதுக.

9. இச்செய்யுளை இயற்றிய புலவர் யார்?

## இலக்கணம்

(அ) இச்செய்யுளிலுள்ள பெயரெச்சம், வினையெச்சங்களை எடுத்தெழுதுக.

(ஆ) "அருளை அறிந்தவள் தமிழன்னை"—இவ்வாக்கியத்தின் எழுவாய், பயனிலை, செயப்படுபொருளைக் குறிக்க.

(இ) அருளை—இதிலுள்ள வேற்றுமை உருபு யாது. அது எந்த வேற்றுமை?

(ஈ) எதிர்ப்பதங்கள் கூறுக:—

இன்பம், புகழ்ச்சி, அருள், பெருமை.

(உ) பிரித்தெழுதுக:—

தன்னலம், தகவுடையாள், தவநெறி.

# 24. விதைக்கிறவன்

| | | |
|---|---|---|
| புன்செய் | இல்லி | அமைவர |
| அள்ளி | அசைபோடுவது | கால்கூறு |
| கருகி | அன்னப்பறவை | பற்றலன் |
| முட்செடி | குற்றம் | கற்க |
| உவமானம் | ஆசான் | கசடு |
| மனநிலை | உரைத்தது | அற |

குடியானவன் ஒருவன் விதை விதைக்கத் தன் புன்செய்க்குச் சென்றான். அங்கே அவன் விதைகளை அள்ளித் தூவியபொழுது சில வழியருகே விழுந்தன. பறவைகள் வந்து அவைகளைப் பொறுக்கித் தின்றுவிட்டன. சில விதைகள் அதிக மண்ணில்லாத கற்பாறைகளில் விழுந்தன. அவை விரைவில் முளைத்தன; வெயில் ஏறின போதோ, கருகிப்போய், உலர்ந்துபோயின. வேறு சில முட்செடிகள் உள்ள இடங்களில் விழுந்தன. முட்செடிகளும் அவைகளோடுகூட வளர்ந்து, பலன் கொடாதபடி அவைகளை நெருக்கின. மற்றும் சில விதைகள் நல்ல நிலத்தில் விழுந்தன. அவை முளைத்துச் செழித்து, ஓங்கி வளர்ந்து, ஒன்று முப்பதும், ஒன்று அறுபதும், ஒன்று நூறுமாகப் பலன் கொடுத்தன.

இது மாணுக்கருக்கேற்ற ஒரு நல்ல உவமானம். ஒவ்வொரு வகுப்பிலும் நால்வகை மாணுக்கர் உளர். சில மாணுக்கருடைய மனநிலை மனிதர் எப்பொழுதும் நடந்துகொண்டிருக்கும் பாதையைப்போல் இருக்கிறது. அவர்களுக்குக் கவனம் என்பது சற்றேனும் கிடையாது. வழியில் விழும் தானியங்கள் சில நிமிடங்களுக்குள்ளே அங்கே காணப்படா

மல் மறைந்துபோவதுபோல, உபாத்தியாயர் போதிக்கும் மணிகள்போன்ற நல்ல போதனைகள் அந்த மாணுக்கருடைய மனத்தில் தங்காமல், சில நிமிடங்களுக்குள் பறந்து செல்லுகின்றன. அவர்கள் கேட்டவைகளை மறந்துவிடுவார்கள். இல்லிக் குடத்தைப் போன்றவர்கள் என்றும் சொல்லலாம்.



வேறு சில மாணுக்கருடைய மனநிலை கற்பாறையைப்போன்றது. இவர்கள் உபாத்தியாயர் கற்பிக்கும் பொருள்களை மகிழ்ச்சியோடு கவனிக்கும் மாணுக்கர். ஆனால் அவர்கள் வகுப்பைவிட்டு வெளியே போனபின் அவைகளைப்பற்றிச் சிறிதும் சிந்திப்பதில்லை. கேட்ட செய்திகள் பெருகத்தக்க விதமாய், மேலும் மேலும் கவனத்தைச் செலுத்தித்

தங்கள் மனத்தைப் பக்குவப் படுத்தாமல், அதைக் கற்பாறையைப்போன்றதாக்கி விடுகிருர்கள். ஆகையால், உபாத்தியாயருடைய போதனைகள் ஊன்றிப் பதியாமல், உலர்ந்து, இருந்த இடம் தெரியாமல் மறைந்துபோகின்றன.

சில மாணவர்களுடைய மனநிலை முட்செடிகளுள்ள இடங்களைப்போல் இருக்கிறது. இவர்கள் உபாத்தியாயருடைய நல்ல போதனைகளைக் கவனத்தோடும் மகிழ்ச்சியோடும் ஏற்றுக்கொள்ளுகிருர்கள். ஆனல் கெட்ட தோழரோடு சேர்வதினுலும், கெடுதலான புத்தகங்களையும் பத்திரிகைகளையும் வாசிப்பதினுலும், உபாத்தியாயர் தங்களுக்குக் கற்பித்த நல்ல காரியங்களோடு தீய காரியங்களையும் சேர்த்துவிருத்திசெய்கிருர்கள். கடைசியில், உபாத்தியாயருடைய மணிகள் போன்ற நல்ல உபதேசங்கள் இத் தீய உபதேசங்களாகிய முட்செடிகளால் நெருக்கப்பட்டுப் பலன் கொடாமற்போகின்றன.

சில மாணுக்கருடைய மனநிலையோ, பக்குவப் படுத்தப்பட்ட நல்ல நிலத்தைப்போல் இருக்கிறது. அவர்கள் கவனத்தோடு உபாத்தியாயர் சொல்வதைக் கேட்டு, மனத்தில் வைத்துக்கொண்டு, பள்ளிக்கூடத்தைவிட்டுப் போனபின், பசு அசை போடுவதுபோலச் சிறிது சிறிதாகத் திரும்ப அவைகளை நினைப்பூட்டிக்கொண்டு சிந்தித்து, அன்னப்பறவை பாலையும் நீரையும் வேறு பிரித்துப் பாலைமாத்திரம் குடித்தல்போல, குணத்தையும் குற்றத்தையும் வேறு பிரித்துக் குணத்தை மாத்திரம் உட்கொள்வர். இத்தகைய நல்ல மாணவர்கூட

ஆசிரியர் கற்பிப்பதில் கால் பங்குக்கு மேல் கற்றிருக்கமாட்டார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

[1]'ஆசான் உரைத்த [2]அமைவரக் கொளினும்
[3]காற்கூறல்லது [4]பற்றலனாகும்.'

ஆகையால்,

'கற்க [5]கசடற கற்பவை; கற்றபின்
நிற்க அதற்குத் [6]தக.'

## பயிற்சி

1. குடியானவன் தூவிய விதைகள் என்னென்ன விதமான நிலங்களில் விழுந்தன?

2. இந்த உவமையின்படி மாணாக்கரை எத்தனை பிரிவுகளாகப் பிரிக்கலாம்?

3. நல்ல மாணாக்கருக்கு இருக்கவேண்டிய குணங்கள் எவை?

4. இவ்வார்த்தைகளுக்கு அதே பொருளுள்ள வேறு வார்த்தைகள் சொல்லு:—

பறவை, பாதை, இல்லி, ஆசான், கூறு, கசடு.

5. இவற்றிற்கு இரண்டு அர்த்தங்கள் சொல்லு.

கால், நிலை.

6. பாறை, பாரை. ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் உபயோகப்படுத்து.

## இலக்கணம்

1. இவ்வினைச் சொற்களினின்று வரும் தொழிற்பெயர்கள் எவை?

புறப்பட்டான், விழுந்தான், கற்க, தந்தன, உலர்ந்து, மறைந்து, முளைத்தன.

---

[1] ஆசான் = ஆசிரியன். [2] அமைவர = நிறைய. [3] காற்கூறு = கால்பங்கு. [4] பற்றலன் = பெறுதவன். [5] கசடுஅற = குற்றம் நீங்க. [6] தக = தக்கபடி.

2. நல்ல நிலத்தில் விழுந்த விதைகள் ஒன்று முப்பதும், ஒன்று அறுபதும், ஒன்று நூறுமாகப் பலன் தந்தன.

இவ்வாக்கியத்திலிருக்கும் நிறுத்தல் குறிகளைக் கவனி. . இது முற்றுப்புள்ளி; , இது காற்புள்ளி; நாம் எழுதும் பொழுது பொருள் தெளிவாகத் தெரியும்படி இப்புள்ளிகளை வைக்கிறோம். முற்றுப் பெற்ற அர்த்தத்தையுடைய வாக்கியத்தின் முடிவிலே முற்றுப்புள்ளியை வைக்கிறோம். முடிவு பெறுமல் அடைமொழிகளாய் வரும் சொற்களுக்கு இடையிலும், ஒன்றுக்கு மேற்பட்ட பெயர்ச் சொற்கள் எழுவாயாக வரும்பொழுது அவை ஒவ்வொன்றுக்கும் இடையிலும், ஒரு பெயர்ச்சொல் விளிவேற்றுமை யடையும்பொழுதும் கால் புள்ளி வைக்கவேண்டும்.

(உ-ம்.) (1) பித்தளையானது அழகும், மஞ்சள் நிறமு முள்ள ஒரு உலோகம். (2) பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் இவ்வைந்தும் பஞ்சலோகங்கள் எனப்படும். (3) மாணுக்கரே, கவனியுங்கள்.

## 25. தந்தையின் மாருத அன்பு

| | | |
|---|---|---|
| செல்வன் | வீணர் | கொடுத்துவைக்க |
| தனயன் | நட்பு | தகுதி |
| வேண்டுகோள் | அமர்ந்தான் | ஆயத்தம் |
| இசைத்து | பரிதாபம் | மகிழ்ச்சி |
| துன்மார்க்கர் | சம்பிரமமாய் | |

ஒரு செல்வனுக்கு இரண்டு மக்கள் இருந்தனர். அவர்களில் மூத்தவன் தகப்பனுர் சொல்லைத் தட்டாமல் அவருக்குக் கீழ்ப்படிந்து நடந்துவந்தான். இளையவன் தகப்பன் பேச்சைக் கேட்பதில்லை. ஒரு நாள் அவன் தன் தந்தையிடம் வந்து, 'அப்பா, உள்ள பொருள்களில் எனக்கு வரும் பாகத்தை இப்பொழுதே பிரித்துத் தந்துவிடுங்கள்' என்றுன்.

தந்தை தனயனை நோக்கி, 'மகனே, அது நல்லதல்ல' என்று எவ்வளவோ சொல்லிப்பார்த்தும் அவன் கேட்கவில்லை. கடைசியாக, அவர் அதிக வருத்தப் பட்டார். மகனுடைய் வேண்டுகோளுக்கிசைந்து பொருள்களைப் பிரித்துக் கொடுத்தார்.



சில நாட்கள் சென்றன. அவன் தனக்குக் கிடைத்த பணத்தை எடுத்துக்கொண்டு தூரதேசத் துக்குப் போய்விட்டான். அங்கே குடிகாரரோடும், துன்மார்க்கரோடும், வீணர்களோடும் நட்புக்கொண் டான். தன் பொருள் முழுவதையும் விரைவில் அழித்துவிட்டான். எங்கேயாவது வேலைசெய்து பிழைக்கவேண்டுமென்று அவன் நினைத்தான். கடைசியாக, வேலை ஒன்றும் அகப்படாமல், ஒரு குடியானவனிடத்தில் போய், பன்றி மேய்க்கும் வேலையில் அமர்ந்தான். அவ்வேலை செய்யும் சம யத்தில் அடிக்கடி பசியினால் வருந்திப் பன்றிகள் உண்ணும் உணவினால் தன் வயிற்றை நிரப்ப ஆசைப்படுவான். என்ன பரிதாபம்! 'நிழலின் அருமை வெயிலில் போனால் அன்றோ தெரியும்?'

இவ்வாறு சிறிது காலம் கழிந்தது. பின் அவன் தன் தகப்பன் வீட்டைப்பற்றி நினைத்தான். அவன், 'ஆ! என் தகப்பன் வீட்டு வேலைக்காரர் எவ்வளவு சம்பிரமமாய் உயர்ந்த உணவு உண்ணுகிறார்கள். அவர்கள் இலையில் மீதிவைக்கிற சாப்பாடுகூட எனக்குக் கொடுத்துவைக்கவில்லையே! நான் ஏன் இப்படிப் பசியினாலே சாகவேண்டும்?' நான் எழுந்து என் தகப்பனண்டை போய், 'தகப்பனே! கடவுளுக்கும் உங்களுக்கும் ஏற்காதவைகளைச் செய்தேன். இனி நான் உங்கள் குமாரன் என்று அழைக்கப் படத் தகுதியுள்ளவன் அல்லன். என் குற்றத்தை மன்னித்து என்னை ஒரு வேலைக்காரனைப்போலாவது ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று அவர்கள் காலடியில் விழுவேன்' என்று தீர்மானித்தான். உடனே தானிருந்த இடத்தைவிட்டுப் புறப்பட்டான். நடந்து தன் தகப்பன் வீடு நோக்கிச் சென்றான்.

வீட்டின் மேல்மெத்தையில் உட்கார்ந்திருந்த தகப்பனார் சிறிது தூரத்திலே தன் மகன் வருவதைக் கண்டு, அவசரமாய்க் கீழே இறங்கினார். தெருவுக்கு ஓடினார்; அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு முத்தமிட்டார்; பின்பு வேலைக்காரரைக் கூப்பிட்டு, விலையுயர்ந்த உடுப்புகள் கொண்டுவரச் சொல்லி அவனை உடுத்துக்கொள்ளச் செய்தார். பெரிய விருந்தும் ஆயத்தப்படுத்தி எல்லாரும் சாப்பிட்டு மகிழ்ச்சி கொண்டாடினார்கள். தகப்பனார் மிகுந்த ஆனந்தங்கொண்டு, 'என் குமாரனாகிய இவன் மரித்தான், இப்பொழுது உயிரோடிருக்கிறான்; காணமற்போனான், இப்பொழுது காணப்

பட்டான்' என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டு மகிழ்ச்சியடைந்தார்.

### பயிற்சி

1. இக்கதையிலிருந்து நீ அறிந்துகொள்ளுவது என்ன?

2. இவற்றிற்கு அதே பொருளுள்ள வேறு வார்த்தைகள் சொல்லு:—

தனயன், தகப்பன்.

3. இவற்றிற்கு எதிர் வார்த்தைகள் வேண்டும்:—

கெட்ட, துன்மார்க்கன், மூத்தவன், பாவம், மகிழ்ச்சி.

### இலக்கணம்

1. தகப்பனுர் வேலைக்காரரைக் கூப்பிட்டு, விலை உயர்ந்த உடுப்புகள் கொண்டுவரச் சொல்லி, அவனுக்கு உடுத்தினுர்.

இதை மூன்று வாக்கியங்களாகப் பிரித்து எழுது

2. மகனே அது நல்லதல்ல என்று தந்தை சொன்னுன்.

(1) இந்த வாக்கியத்தில் தகுந்த இடங்களில் கால் புள்ளி, முற்றுப்புள்ளி, மேற்கோள்குறிகள் வைத்துத் திருப்பி எழுது.

(2) மகனே—இது எந்த வேற்றுமை?

(3) நல்லதல்ல—இதை இரண்டு வார்த்தைகளாகப் பிரித்து எழுது.

## 26. கடிதம் எழுதுவது (மாதிரி 1)

[தமையன் தம்பிக்கு எழுதுவது]

| | |
|---|---|
| தமையன் | அத்தை |
| சிரஞ்சீவி | விளங்காத |
| ஆசீர்வாதம் | மாலையில் |
| செய்தி | |

பல்லாவரம்,
15, செப்டம்பர் 1956.

அன்புள்ள தம்பி சிரஞ்சீவி சிங்காரவேலுக்கு அநேக ஆசீர்வாதம்.

இவ்விடம் நாங்கள் எல்லோரும் கடவுள் அருளால் நலமாய் இருக்கிறோம். அவ்விடத்துச் செய்திகளைப்பற்றி அடிக்கடி கடிதம் எழுது.

நீ தனியாய்ப்போய் மாமா வீட்டில் படித்துக் கொண்டிருப்பதைக் குறித்து நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். மாமாவுக்கும் அத்தைக்கும் யாதொரு தொந்தரவும் கொடாமல், அவர்கள் சொற்படி செய். உன் பாடங்களை நன்றாய்ப் படிக்கவேண்டும். பாடங்களில் உனக்கு விளங்காதவைகளை மாமாவிடத்தில் கேட்டுக்கொள். எப்பொழுதும், எல்லோரிடத்திலும் உண்மையே பேசு. மாலையில் இருட்டுமுன் வீட்டுக்கு வந்துவிடு.

உனக்குப் புத்தகமாவது, துணியாவது, சட்டையாவது வேண்டியதாயிருந்தால் எழுதியனுப்பு.

இப்படிக்கு,
உன் அன்புள்ள தமையன்,
தியாகராசன்.

## 27. கடிதம் எழுதுவது (மாதிரி 2)

[கிராமத்திலிருந்து சென்னைப்பட்டினம் சென்றிருக்கும் தகப்பனருக்கு மகன் எழுதுவது]

| | | |
|---|---|---|
| அன்பார்ந்த | சம்பா | தேதி |
| வணக்கம் | நாற்றங்கால் | நலம் |
| எருவடித்து | ஒழுங்கு | |
| கிடை வைத்து | | |

ஆலக்குடி,
தஞ்சை மாவட்டம்,
**20-6-1956.**

நலம்.

அன்பார்ந்த அப்பா அவர்களுக்கு வணக்கம் செய்து எழுதிக்கொள்ளும் செய்தி யென்னவென்றால்:—

உங்களுடைய அன்பான கடிதம் நேற்று வந்து சேர்ந்தது. இங்கு நாங்கள் யாவரும் கடவுள் அருளால் நலமாயிருக்கிறோம். நீங்கள் புறப்படும்போது என்னிடத்தில் சொன்ன செய்திகள் யாவையும் கவனித்துக்கொண்டு வருகிறேன். வயல்களுக்கு எருவடித்துக் கிடையும் வைத்தாயிற்று. முன்னரே கட்டிவைத்திருந்த சம்பா விதையை நாற்றங்காலில் விதைக்கும்படி ஒழுங்கு செய்திருக்கிறேன்.

இன்னும் ஒரு வாரத்துக்குள் நீங்கள் திரும்பி விடுவதாக உங்கள் கடிதத்தில் எழுதியிருப்பதைக் கண்டு மகிழ்கிறோம். நீங்கள் வரும்பொழுது தம்பிக்கு இரண்டு பனியனும், தங்கைக்கு ஒவ்வொன்று ஒரு கெஜ நீளத்தில் அரை டசன் பட்டு ரிபன்

களும் வாங்கிக்கொண்டு வரும்படி அம்மா எழுதச் சொல்லுகிருர்கள். கூடுமானுல், மூர்மார்க்கேட்டில் எனக்கேற்ற புதிய பொருள்கள் ஏதாவது வாங்கிக் கொண்டு வாருங்கள்.

நீங்கள் வரும் தேதியைக் குறித்துத் திட்ட மாய்க் கடிதம் எழுதுங்கள். நான் புகைவண்டி நிலையத்திற்கு வண்டி அனுப்புகிறேன்.

இப்படிக்கு,
உங்கள் அன்புள்ள மகன்,
கனகராசன்.

தந்தை விலாசம்:—

உயர்திரு,

அ. மாசிலாமணிப் பிள்ளை அவர்கள்,
47, சாமிநாய்க்கன் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னைப்பட்டினம்—2.

## 28. கடிதம் எழுதுவது (மாதிரி 3)

[தந்தையின் பதில்]

47, சாமிநாய்க்கன் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை,
சென்னைப்பட்டினம்.
22-6-56.

செல்வச் சிரஞ்சீவி கனகராசனுக்கு அநேக ஆசீர்வாதம்.

**20-6-56**-ல் நீ எழுதிய அன்பான கடிதம் நேற்றுப் பிற்பகல் எனக்குக் கிடைத்தது. நான் இங்கு வந்த காரியம், கடவுள் அருளால், இந்த வாரக் கடைசிக்குள் முடிந்துவிடுமென்று நம்பு கிறேன். ஆகையால், நான் இந்த மாதம் 30உ இரவு 9 மணிக்கு இங்கிருந்து புறப்படும் வண்டி யில் அங்கு வர எண்ணியிருக்கிறேன்.

நீ எழுதியுள்ள பொருள்கள் எல்லாவற்றையும் வாங்கிக்கொண்டு வருவேன். அவ்விடம் நீங்கள் யாவரும் நலமா யிருப்பீர்களென்று நம்புகிறேன்.

இப்படிக்கு,
உன் அன்புள்ள தந்தை,
அ. மாசிலாமணி.

## பயிற்சி

1. வருகிற விடுமுறையில் மானாமதுரையிலிருக்கும் உன் மாமா வீட்டுக்குப் போய் அங்கே மூன்று நாட்கள் தங்கும்படி நீ உத்தேசித்திருப்பதாக அவருக்கு ஒரு கடிதம் எழுது.

2. இவ்வார்த்தைகளுக்கு அதே பொருளுள்ள வேறு வார்த்தைகள் சொல்லு:—

நமஸ்காரம், கிடை, நாற்றங்கால்.

## இலக்கணம்

1. இவற்றிற்குப் பெண்பால் எழுது:—

மாமா, தமையன், தம்பி, குமாரன்.

2. இவ்வொருமைப் பெயர்களுக்குப் பன்மை எழுது:—

கடிதம், வாரம், சாமான், நீ, நான்.

# 29. பதிலுக்குப் பதில்

| | | |
|---|---|---|
| வணிகன் | மீண்டும் | ஒளித்து |
| பொருளீட்ட | வியந்தான் | நகைத்து |
| தேசாந்தரம் | இருக்கட்டும் | சம்பவித்தது |

மதுரையில் தேவதத்தன் என்னும் ஒரு வணிகன் இருந்தான். அவன் ஆதாயம் குறையத் தொடங்கவே மறுபடியும் பொருளீட்ட நினைத்துத் தேசாந்திரம் போகப் புறப்பட்டான். தன்னிடமிருந்த ஆயிரம் இரும்புக் கம்பிகளையும் தன் நண்பனிடத்தில் வைத்துவிட்டுப் போனான். போனவிடத்தில் பொருள் ஈட்டப் பலவகை உபாயங்கள் செய்தான். பணம் அகப்படாமையால், மீண்டும் வீட்டுக்கு வந்தான். தன்னுடைய இரும்புக் கம்பிகளைக் கொடுக்குமாறு நண்பனைக் கேட்டான். நண்பன் ஆசை மிகுதியினால் 'இரும்புக் கம்பிகளை எலிகள் தின்றுவிட்டன' என்றான். அவன் இம்மொழி கேட்டு வியந்தான். 'நல்லது, இருக்கட்டும்' என்று சொல்லி வீட்டிற்குப் போய்விட்டான்.

பிறகு ஒருநாள் விளையாடுவதற்காக, நண்பனுடைய பிள்ளையை அவனிடத்திலிருந்து எடுத்துக் கொண்டுபோய் மற்றொரு வீட்டில் ஒளித்துவைத்தான். பின்பு சிநேகிதனிருந்த இடத்திற்கு வந்தான். அவன் 'உன்னிடத்தில் இருந்த என் பிள்ளை எங்கே?' என்றான். வியாபாரி 'உன் பிள்ளையைப் பறவை தூக்கிக்கொண்டு போயிற்று' என்றான். இதை அவன் கேட்டு மிக வருந்தி இவனை இழுத்துக்கொண்டு ஊர் அதிகாரியண்டை போய், 'இந்தத் தீயன் என் பிள்ளையைக் கொண்டுபோய் ஒளித்து

வைத்துவிட்டுப் பிள்ளையைப் பட்சி எடுத்துக் கொண்டு போயிற்று என்கிறான்; என் பிள்ளையை எனக்கு வாங்கித்தரவேண்டும்' என்றான். அதிகாரி இதைக் கேட்டு வியாபாரியை அழைத்து, 'இவன் பிள்ளை எங்கே இருக்கிறது? சொல்' என்றான்.

அவன் 'இவன் பிள்ளையைப் பட்சி கொண்டு போயிற்று' என்றான். அதிகாரி இதைக் கேட்டு நகைத்தான். 'இவ்வாறு இதுவரை உலகத்தில் நடைபெறவில்லை; அப்படியிருக்க, நீ இவ்வாறு சொல்வதற்குக் காரணம் என்ன?' என்றான். அப்போது அவன், 'இது ஒரு ஆச்சரியமா? ஆண்டவனே! இரும்புக்கம்பிகளை எலிகள் எவ்வாறு தின்றனவோ அப்படியே இதுவும் சம்பவித்தது' என்றான். இதைக் கேட்டு நியாயாதிபதி முன் நடந்தவைகளை விசாரித்து அறிந்து, 'அவனுடைய இரும்புக் கம்பிகளை நீ கொண்டுவந்து கொடுத்தால், அவன் உன் பிள்ளையைக் கொண்டுவந்து கொடுப்பான்' என்று தீர்ப்புச் செய்தான். அவ்விருவரும் அப்படியே செய்தார்கள்.

### பயிற்சி

1. இந்தக் கதையை மௌனமாகப் படித்து, சுருக்கமாகச் சொல்லு.

2. இவற்றிற்கு அர்த்தம் சொல்லு:—

வணிகன், தேசாந்திரம், நண்பன்.

### இலக்கணம்

இப்பாடத்திலிருக்கும் முதல் இரண்டு வாக்கியங்களை ஒரே வாக்கியமாக எழுது.

செய்யுட் பகுதி

## 30. கடவுள் வாழ்த்து

எண்ணுமாகினை இறையுமாகினை
ஏகமாகினை யாகமாகினை
கண்ணுமாகினை ஒளியுமாகினை
கதியுமாகினை பதியுமாகினை
பண்ணுமாகினை பாவுமாகினை
பரமுமாகினை வரமுமாகினை
விண்ணுமாகினை வெளியுமாகினை
வேதநாயகா வேதநாயகா.

—தஞ்சை, வேதநாயக சாஸ்திரியார்.

## 31. அதிவீரராமபாண்டியர்

அருளிச்செய்த

### வெற்றிவேற்கை

1. கல்விக் கழகு கசடற மொழிதல்.
2. செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.
3. மன்னர்க் கழகு செங்கோன் முறைமை.
4. மந்திரிக் கழகு வரும்பொரு ளுரைத்தல்.
5. தந்திரிக் கழகு தறுக ணாண்மை.
6. உண்டிக் கழகு விருந்தோ டுண்டல்.
7. அறிவோர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்.
8. வறியோர்க் கழகு வறுமையிற் செம்மை.

9. தேம்படு பனையின் திரள்பழத்தொருவிதை
வானுற வோங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலா காதே.
10. தெள்ளிய வாலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துட் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி யாட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே.
11. பெரியோ ரெல்லாம் பெரியரு மல்லர்.
12. சிறியோ ரெல்லாம் சிறியரு மல்லர்.
13. பெற்றோ ரெல்லாம் பிள்ளைக ளல்லர்.
14. உற்றோ ரெல்லாம் உறவின ரல்லர்.
15. அடினு மாவின்பால் தன்சுவை குன்றாது.
16. சுடினும் செம்பொன் தன்னொளி கெடாது.
17. அரைக்கினுஞ் சந்தனம் தன்மண மாறாது.
18. புகைக்கினும் காரகில் பொல்லாங்கு கமழாது.
19. கலக்கினுந் தண்கடல் சேறா காதே.
20. ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே.
21. நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குட் பாசிபோல் வேர்க்கொள் ளாதே.
22. பெருமையுஞ் சிறுமையுந் தான்றர வருமே.
23. சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்
பெரியோ ராயிற் பொறுப்பது கடனே.
24. சிறியோர் பெரும்பிழை செய்தன ராயின்
பெரியோ ரப்பிழை பொறுத்தலு மரிதே.

25. கற்கை நன்றே கற்கை நன்றே.

26. பிச்சை புகினுங் கற்கை நன்றே.

27. கல்லா வொருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதராகும்மே.

28. எக்குடி பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை மேல்வருக வென்பார்.

29. அறிவுடை யொருவனை அரசனும் விரும்பும்.

30. யானைக் கில்லை தானமுந் தருமமும்.

31. பூனைக் கில்லை தவமுந் தயையும்.

32. ஞானிக் கில்லை இன்பமுந் துன்பமும்.

33. சிதலைக் கில்லை செல்வமுஞ் செருக்கும்.

34. முதலைக் கில்லை நீச்சும் நிலையும்.

35. அச்சமும் நாணமும் அறிவிலோர்க் கில்லை.

36. நாளும் கிழமையும் நலிந்தோர்க் கில்லை.

37. கேளுங் கிளையும் கெட்டோர்க் கில்லை.

38. உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா.

39. குடைநிழ லிருந்து குஞ்சர மூர்ந்தோர்
நடைமெலிந் தோரூர் நண்ணினும்
நண்ணுவர்.

40. சிறப்புஞ் செல்வமும் பெருமையு முடையோர்
அறக்கூழ்ச் சாலை அடையினு மடைவர்.

41. அறத்திடு பிச்சை கூவி யிரப்போர்
அரசோ டிருந்தர சாளினும் ஆளுவர்.

42. குன்றத் தனையிரு நிதியைப் படைத்தோர்
அன்றைப் பகலே யழியினு மழிவர்.

43. எழுநிலை மாடங் கால்சாய்ந் துக்குக்
கழுதை மேய்பா ழாயினு மாகும்.

44. மணவணி யணிந்த மகளி ராங்கே
பிணவணி யணிந்துதங் கொழுநரைத் தழீஇ
உடுத்த ஆடை கோடியாக
முடித்த கூந்தல் விரிப்பினும் விரிப்பர்.

45. பெற்றமுங் கழுதையும் மேய்த்த வப்பாழ்
பொற்றொடி மகளிரும் மைந்தருஞ் செறிந்து
நெற்பொலி நெடுநகர் ஆயினு மாகும்.

46. இல்லோ ரிரப்பதும் இயல்பே யியல்பே.

47. இரந்தோர்க் கீவதும் உடையோர் கடனே.

48. தறுகண் யானை தான்பெரி தாயினும்
சிறுகண் மூங்கிற் கோற்கஞ் சும்மே.

49. சான்றோ ரில்லாத் தொல்பதி யிருத்தலின்
தேன்தேர் குறவர் தேய நன்றே.

50. குடியலைத் திரந்து கோலொடு நின்ற
முடியுடை யிறைவனும் மூர்க்கனும் பதரே.

51. முதலுள பண்டங் கொண்டுவா ணிபஞ்செய்
ததன்பய னுண்ணு வணிகரும் பதரே.

52. வித்து மேரும் உளவா யிருப்ப
எய்த்தங் கிருக்கும் ஏழையும் பதரே.

53. தன்னு யுதமும் தன்கையிற் பொருளும்
பிறன்கையிற் கொடுக்கும் பேதையும் பதரே.

54. வாய்பறை யாகவும் நாக்கடிப்பாகவும்
சாற்றுவ தொன்றைப் போற்றிக் கேண்மின்.

55. பொய்யுடை யொருவன் சொல் வன்மையினல்
மெய்போ லும்மே மெய்போ லும்மே.

56. மெய்யுடை யொருவன் சொலமாட்டாமையால்
பொய்போ லும்மே பொய்போ லும்மே.

57. பழியா வருவதூஉம் மொழியா தொழிவது.

58. துணையோ டல்லது நெடுவழி போகேல்.

59. புணைமீதல்லது நெடும்புன லேகேல்.

60. வழியே யேகுக வழியே மீளுக.

கதைப் பகுதி

# 32. புத்தர் அறிவுரை

## புத்தர் அறிவுரை கூறி யாகத்தைத் தடுத்தல்

1. ஆட்டின் கழுத்தை அறுத்துப் பொசுக்கிநீர்
ஆக்கிய யாகத் தவியுணவை
ஈட்டும் கருணை இறையவர் கைகளில்
ஏந்திப் புசிப்பாரோ? கூறுமையா

2. மைந்தருள் ஊமை மகனை ஒருமகன்
வாளால் அரிந்து கறிசமைத்தால்
தந்தையும் உண்டு களிப்பதுண்டோ? இதைச்
சற்றுநீர் யோசித்துப் பாருமையா!

3. காடு மலையெலாம் மேய்ந்துவந் தாடுதன்
கன்று வருந்திடப் பாலையெல்லாம்
தேடிஉம் மக்களை ஊட்டுவதும் ஒரு
தீய செயலென எண்ணினீரோ?

4. மேடையில் நீங்களும் மூடிப் படுத்திட
மெல்லிய கம்பளி தானளித்து
வாடையிலாடிக் கொடுகுவதும் அதன்
வஞ்சகச் செய்கையோ? சொல்லுமையா!

5. அம்புவி மீதில்இவ் வாடுகளும் உம்மை
அண்டிப் பிழைக்கும் உயிரலவோ?
நம்பி யிருப்பவர் கும்பி எரிந்திடில்
நன்மை உமக்குவரு மோ? ஐயா!

6. காட்டுப் புலியின் கொடுமை யஞ்சி உங்கள்
கால்நிழல் தங்கிய ஆடுகளை
நாட்டுப் புலியெனக் கொல்லுவதோ அந்த
நான்மறை போற்றிய நீதி? ஐயா!

7. மண்ணில் வளர்ந்திடும் புல்லையுண் ணும்வான
மாரி பொழிந்திடும் நீரையுண் ணும்
எண்ணிநீர் செய்யும் உதவியென் னும்? இதை
ஏனோ உணர்ந்திலீர், மானிடரே!

8. ஆயிரம் பாவங்கள் செய்தவெல் லாம்ஏழை
ஆட்டின் தலையோ டகன்றிடுமோ?
தீயவும் நல்லவும் செய்தவரை விட்டுச்
செல்வ தொருநாளு மில்லை, ஐயா!

—தேசிக விநாயகம் பிள்ளை.

## 33. நீதிவெண்பா

### தேர்ந்து செயல்

1. செய்யுமொரு கருமம் தேர்ந்து புரிவதன்றிச்
செயின் மனத்தாபம்சேருமே—செய்யவொரு
நற்குடியைக் காத்த நகுலனை முன்கொன்ற
மறைப்
பொற் கொடியைச் சேர் துயரம் போல்.

### நாவின் நயம்

2. நாவினுனியில் நயமிருக்கின்ற பூமாதும்
நாவினிய நல்லோரும் நண்ணுவார்—
நாவினுனி
ஆங்கடினமாயின் அலர்த்திருவும்சேராள் முன்
ஆங்கே வருமரணமாம்.

### ஆசை

3. ஆசைக்கடியான் அகில லோகத்தினுக்கும்
ஆசற்ற நல்லடியானுவனே— ஆசை
தனையடிமை கொண்டவனே தப்பாதுலகம்
தனையடிமை கொண்டவனேதான்.

### கொடுத்துண்ணல்

4. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல்
என்றி [வர்க்கீந்(து)
இன்புறத்தானுண்டல் இனிதாமே
—அன்புறவே
தக்கவரையின்றித் தனித்துண்டல் கவர்மீன்
கொக்கருந்தல் என்றே குறிமேலோர் நட்பு.

5. பாலினீபுக தீயனுங்கப்பால் வெகுண்டு
தீப்புகுந்து
மேலுநீர் கண்டமையும் மேன்மைபோல்
நூலினெறி
உற்றோரிடுக்கண் உயிர்கொடுத்து மாற்றுவரே
மற்றோர் புகலமிதித்து.

# 34. வாக்குண்டாம்

### நல்லார் இணக்கம்

1. நல்லாரைக் காண்பதுவு நன்றே நலமிக்க
நல்லார் சொல் கேட்பதுவு நன்றே—நல்லார்
குணங்கள் உரைப்பதுவு நன்றே யவரோடு
இணங்கி யிருப்பதுவு நன்று.

### நல்லார் சிறப்பு

2. நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கு மாங்கே பொசியுமாம்—தொல்லுல
நல்லார் ஒருவர் உளரே லவர்பொருட்டு [கில்
எல்லார்க்கும் பெய்யும் மழை.

### உருவுகண்டிகழேல்

3. மடல் பெரிதுதாழை மகிழினிது கந்தம்
உடல் சிறிய ரென்றிருக்கவேண்டா—கடல்
மண்ணீரு மாகாது அதனருகே சிற்றூறல்
உண்ணீரு மாகிவிடும்.

### நட்பு

4. அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லார்—அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டியுறுவார் உறவு.

### அறிஞர் இயல்பு

5. சாந்தனையும் தீயனவே செய்திடினும்
தாமவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர்—
மாந்தர்
குறைக்குந்தனையும் குளிர் நிழலைத் தந்து
மறைக்குமாங் கண்டீர் மரம்.

# செய்யுள் பாகத்தின்

## அரும்பத வுரை

### கடவுள் வாழ்த்து

எண்ணும் ஆகினை—சிந்தனைப் பொருளும் ஆனாய்,
ஆகம் ஆகினை—உடல் எடுத்தாய், பண்—இராகம், பா—பாட்டு.

வெற்றிவேற்கை—வெற்றிதரும் வேலாயுதத்தை
ஏந்திய கை

1. கசடு—குற்றம்
அற—நீங்க
2. செல்வர்—பணக்காரர்
கிளை—சுற்றத்தார்
3. மன்னர்—அரசர்
செங்கோல் முறைமை — செங்கோலின் ஒழுங்கு, அதாவது நீதி தவறாமல் ஆளுதல்
4. வரும்பொருள்—இனி வரும் காரியம்
5. தந்திரி—படைத்தலைவன்
தறுகண்—அஞ்சாமையாகிய
ஆண்மை—வீரம்
6. உண்டி—உணவு
7. கற்று—வாசித்து
உணர்ந்து—தெளிந்து
அடங்கல்—அமைந்திருத்தல்
8. வறியோர்—தரித்திரர்
வறுமை—தரித்திரம்
செம்மை — ஒழுக்கம் கெடா திருத்தல்
9. தேம்படு—இனிமை பொருந்திய
திரள்—திரண்ட
வான்உற—ஆகாயத்தைத் தாவ
வளம்—செழுமை
10. தெள்ளிய—தெளிந்த
தெள்நீர்—தெளிந்த நீர்
கயம்—குளம்
சினை—முட்டை
நுண்ணிதேயாயினும் — சிறியதேயானாலும்
அண்ணல்—பெருமைபொருந்திய
அணி—அழகிய
புரவி—குதிரை
ஆள்—காலாள்
படை—சேனை
11. பெரியோர்—உருவத்தில் பெரியவர்
12. சிறியோர்—உருவத்தில் சிறியவர்
13. பெற்றோர்—பெற்ற பிள்ளைகள்
14. உற்றோர்—உறவினர்
15. அடினும்—காய்ச்சினாலும்
ஆவின்—பசுவின்
சுவை—ருசி
16. சுடினும்—சுட்டாலும்
ஒளி—பிரகாசம்
17. மணம்—வாசனை
அருது—நீங்காது
18. கார்—கரிய
அகில்—அகில்கட்டை
பொல்லாங்கு—துர்நாற்றம்
கமழாது—வீசாது
19. தண்—குளிர்ச்சி பொருந்திய
20. கேண்மை—சிநேகம்
இருநிலம்—பெரிய பூமி
21. ஆண்டு—வருடம்
மூர்க்கர்—மூடர்கள், கோபிகள்
22. பெருமை—உயர்வு

சிறுமை—தாழ்வு
23. பிழை—குற்றம்
பொறுப்பது—சகிப்பது
கடனே—கடமையாம்
24. அரிது—அருமை
25. கற்கை—நூல்களைப் படித்தல்
26. பிச்சைபுகினும்—பிச்சை யெடுக்கப்போனாலும்
27. குலநலம்—சாதியின் சிறப்பு
28. குடி—வமிசம்
29. விரும்பும்—விரும்புவான்
30. தானம்—ஈகை
31. தவம்—விரதம்
32. ஞானி—பேரறிவுடையவன்
33. சிதலை—கறையான்
செருக்கு—அகங்காரம்
34. நீச்சு—நீந்தல்
35. அச்சம்—பயம்
நாணம்—வெட்கம்
36. நலிந்தோர்—வியாதிக்காரர்
37. கேள்—சிநேகம்
38. உடைமை—செல்வம்
வறுமை—தரித்திரம்
39. குஞ்சரம்—யானை
ஊர்ந்தோர்—நடத்தினவர்
நண்ணுவர்—சேருவர்
40. அறக்கூழ்ச்சாலை—தரும அன்ன சத்திரம்
41. அறத்து—தருமத்திற்காக
கூவி—கூப்பிட்டு
இரப்போர்—பிச்சையெடுப்போர்
42. குன்று—மலை
இரு—பெரிய
நிதி—திரவியம்
43. எழுநிலை—ஏழு அடுக்கினையுடைய
மாடம்—வீடு
உக்கு—நொறுங்கி
பாழ்—பாழ்நிலம்
44. மண அணி—மணக்கோலம்
பிண அணி—பிணக்கோலம்
கொழுநர்—கணவர்

தழீஇ—தழுவி
ஆடை—சீலை
கூந்தல்—மயிர்
45. பெற்றம்—எருது
பொன் தொடி—பொன்னாலாகிய வளையல்
செறிந்து—கூடிப்பொருந்தி
நெற்பொலி—நெல்லினது அம்பாரம்
நெடுநகர்—பெரிய பட்டணம்
46. இல்லோர்—பொருள் இல்லாதவர்
47. உடையோர்—பொருள்உடையவர்
48. தறுகண்—அஞ்சாமையையுடைய
சிறுகண்—சிறிய கண்களுள்ள
49. சான்றோர்—அறிவில் பெரியோர்
தொல்பதி—பழமையான ஊர்
தேன்தேர்—தேனைத்தேடுகிற
50. குடி—குடிகளை
அலைத்து—வருத்தி
இரந்து—பொருள் வாங்கி
முடி—கிரீடம்
இறைவனும்—அரசனாகிய
51. வாணிபம்—வர்த்தகம்
பயன்—இலாபம்
வணிகர்—வியாபாரிகள்
52. வித்து—விதை
உளஆய் இருப்ப—நீங்காதிருக்க
எய்த்து—சோர்ந்து
53. பேதை—அறிவில்லாதவன்
54. கடிப்பு—அடிக்குங்கோல்
சாற்றுவது—சொல்லுவது
55. சொல்வன்மை — பேசும் சாமர்த்தியம்
56. மெய்—சத்தியம்
57. பழிஆ—(பின்) நிந்தையாக
மொழியாது—பேசாமல்
ஒழிவது—விடக்கடவன்
58. நெடுவழி—நீண்ட பிரயாணம்
59. புணை—தெப்பம்
புனல்—நீர்
60. ஏகுக—போகக்கடவன்

## புத்தர் அறிவுரை

மீளுக—திரும்பக்கடவன்
அவி—யாகத்தில் படைக்கப்பட்ட பொருள்
ஈட்டும்—அடையும்
ஏந்தி—தாங்கி
சற்று—சிறிதளவு
வாடை—வடக்கிலிருந்து வீசும் காற்று
ஆடி—அசைந்து
கொடுகுவது—குளிரால்நடுங்குவது
அம்—அழகிய
புவி—பூமி
கும்பி—வயிறு
நான்மறை—நான்கு வேதங்கள் இருக்கு, யசுர், சாமம், அதர் வணம்
மாரி—மழை
அகன்றிடுமோ—நீங்கிடுமோ
தீய—தீவினைகள்
நல்ல—நல்வினைகள்

TB 031(4) N5

## நீதிவெண்பா

1. கருமம்—செயல்
தேர்ந்து—ஆராய்ந்து
மனத்தாபம்—மனவருத்தம்
நகுலன்—கீரி
மறைப்பொற்கொடி — பிராமணப் பெண்
2. நயம்—இனிமை
பூமாது—திருமகள்
3. அகிலம்—விரிந்த உலகம்
ஆசு—குற்றம்
4. தென்குலத்தார் — பிதிரர், குடும்ப முன்னோர்
தெய்வம்—வழிபடும் கடவுள்
விருந்து—புதிதாகவந்தவர்
ஒக்கல்—உறவினர்
இன்புஉற—மகிழ்ச்சியடைய
தக்கவர்—தகுதிவாய்ந்தவர்
5. அனுங்க—வருத்த
வெகுண்டு—கோபமுற்று
இடுக்கண்—துன்பம்
மாற்றல்—நீக்கல்
புகல்—கொண்டாட

## வாக்குண்டாம்

1. நலம்மிக்க—நன்மை மிகுந்த
இணங்கி—வந்து சேர்ந்து
2. பொசியும்—கசியும்
தொல் உலகு — பழமையான உலகு
3. மடல்—இதழ்
கந்தம்—மணம், வாசனை
மண்நீர்—குளிக்கும் நீர்
ஊறல்—ஊற்று
4. அற்ற—நீரற்ற
அறும்—நீங்கும்
உற்றுழி—ஆபத்து வந்தபோது
தீர்வார்—நீங்குபவர்
5. மாந்தர்—மனிதர்
குறைத்தல்—வெட்டுதல்

ஆவணக்காப்பக ... சென்னை-600 008
132484

## தேசீய கீதத்தின் பொருள்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீ தான்
மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிறாய்
நின் திருநாமம், பஞ்சாப்பையும் சிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது
அது விந்திய ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது
யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது
இந்தியக் கடல் அலைகளால் செழிக்கின்றது
அவை நின் ஆசியை வேண்டுகின்றன; நின் புகழைப் பாடுகின்றன;
இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி, வெற்றி, வெற்றி.

496

CLS

TAMIL READER, BOOK IV

By S. G. DANIEL

விலை 70 நயே பைசே